Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk


தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 19, 2022

புதன்கிழமை ஒக்டோபர் 19, 2022 | ஒளி: 08 கதிர்: 124 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# நீர் இணைப்பு கட்டணமும் எகிறியது



தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை விடுத்துள்ள அறிவிப்பிற்கு அமைய, நேற்று (18) முதல் புதிய குடிநீர் இணைப்பு கட்டணம் அதிகரிப்பட்டுள்ளது. அதன்படி புதிய வீட்டு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு செலுத்த வேண்டிய கட்டணம் 70 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

# ஓட்டோ கட்டணங்களை குறைக்க வேண்டும்

## ஓட்டோ சங்கங்களிடம் அமைச்சர் கோரிக்கை



பா.நிரோஸ்

பெற்றோல் விலை நூறு ரூபாய் வரையில் குறைக்கப்பட்டுள்ளதால், ஓட்டோ கட்டணங்களையும் குறைக்க ஓட்டோ சங்கங்கள் நடவடிக்கை எடுக்க

தொடர்ச்சி P2

ஜனாதிபதி தலைமையில்

# நல்லிணக்கம் தொடர்பாக அமைச்சரவை உபகுழு



இலங்கையில் வாழும் பல்லின மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக மற்றும் வடக்கு, கிழக்கு மோதல்களின் பின்னர் மீள்குடியமர்த்தல், காணி மற்றும் காணாமல் போன ஆட்கள் பற்றி மக்கள் எதிர்கொண்டுள்ள

தொடர்ச்சி P2

# மக்கள் போராட்டம் கலவரமாக வெடிக்கும்



பா. நிரோஸ்

எரிபொருள், எரிவாயு, மின்விநியோகம் தொடர்பில் மக்கள் போராட்டம் தற்போது தணிந்துள்ளதே தவிர நிறைவு பெறவில்லை. வெகுவிரைவில் மக்கள் போராட்டம் கலவரமாக தோற்றம் பெறும். அத்துடன் வலுசக்தி துறையை தனியார் மயப்படுத்துவது எதிர்காலத்தில்

தொடர்ச்சி P2

# 663 பில்லியன் ரூபாயால் அரச கடன் அதிகரிக்கிறது

## ஒரே நாளில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து அங்கிகாரம்

அரச நிதி முகாமைத்துவ குழப்பங்கள் காரணமாக அரசாங்கத்தால் இந்த ஆண்டுக்கான செலவுகளை கையாளக்கூடிய வருமானம் இல்லாது போயுள்ளதாகவும், ஆகவே இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள கடன் பெறும் எல்லையை தாண்டி மேலும் 663 பில்லியன் ரூபாய் கடனை பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2


ஆண்டு இறுதியில்

# கடன் வழங்குநர் கூட்டத்தை கூட்ட ஜப்பான் முயற்சி

இலங்கை எதிர்கொண்டுள்ள கடன் நெருக்கடியை தீர்க்கும் விதமாக, இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் வகையில், இந்த ஆண்டு இறுதிக்குள் கடன் வழங்குநர்களின் கூட்டமொன்றை ஏற்பாடு செய்ய ஜப்பான் தயாராக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் கடன் கொடுப்பனவுகளை குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிவது குறித்து இந்தச் சந்திப்பு எற்பாடு செய்யப்படுவதாக ஜப்பான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் இந்தக்

தொடர்ச்சி P2

# பிரியமாலியின் வர்த்தக பங்காளிக்கு விளக்கமறியல்



பண மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலியின் காதலன் என்று கூறப்படும் அவரின் வர்த்தகப் பங்காளியை இன்று (19) வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு மேலதிக நீதவான் ஷிலனி பெரேரா, நேற்று (18) கட்டளையிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையாத நிலையில் சந்தேகநபருக்கு பிணை

தொடர்ச்சி P2

2023 செலவீனமாக

# ரூ.3,657 பில்லியன் ஒதுக்கீடு



## ஜனாதிபதிக்கான செலவீனம் ரூ.378 கோடி; பிரதமருக்கு 101 கோடி ரூபாய்

பா.நிரோஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான செலவீனமாக 365,726 கோடியே 5,638,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான செலவீனத்தில் அதி கூடிய ஒதுக்கீடாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்

தொடர்ச்சி P2




# போதையால் பாதை மாறுவதை தடுப்போம்

எம்.றொசாந்த்

'போதையால் பாதை மாறும் இளையோரை நல்வழிப்படுத்தி நற்பிஜைகளாக உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளிலான போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று (18) இடம்பெற்றது.

ஃபப்ரல் அமைப்பின் மாற்றத்துக்கான பாதை கற்கை நெறியின் யாழ் மாவட்ட பெண்கள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு திருநெல்வேலி முத்துதம்பி இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அத்துடன், திருநெல்வேலி சந்தைக் கட்டடத்தொகுதி வரை விழிப்புணர்வு பேரணியும் இடம்பெற்றது.



பல்கலைக்கழக மாணவர்களின் ஒன்றியத்தால்

# மீண்டும் போராட்டம்

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக, அனைத்து பல்கலைக்கழக மாணவர்களின் ஒன்றியதால் நேற்று (18) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில், களனி பல்கலைக்கழகத்துக்கு முன்பாக பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், நீர்த்தாரை, கண்ணீர்ப்புகை பிரயோகத்திற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறு இருப்பினும் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களின் ஒன்றியதால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது எனவும், தாம் இதனை

தொடர்ச்சி P2

ஒரு மாதத்துக்கு முன்னர்

# காணாமல் போன கப்பலுடன் தொடர்பு கொண்டது கடற்படை

ஆறு கடற்படை வீரர்களுடன், செப்டெம்பர் 17ஆம் திகதி முதல் காணாமல் போன கடற்படைக் கப்பலுடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

தெற்கு கடற்படை கட்டளை பிரிவின் சிரேஷ்ட அதிகாரி மற்றும் 5 மாலுமிகள் அடங்கிய கடற்படைக் குழுவுடனான தொடர்பு, செப்டெம்பர் 17ஆம் திகதி துண்டிக்கப்பட்டது.

தங்காலை கடற்கரையில் வழக்கமான ரோந்து பணிக்காக செப்டெம்பர் 16ஆம் திகதி குறித்த கப்பல் அனுப்பப்பட்டிருந்தது.

அடுத்த நாள்முதல் கப்பலுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதையடுத்து தேடுதல் நடவடிக்களை ஆரம்பித்த இலங்கை கடற்படை,

தொடர்ச்சி P2

# 'புக்கர்' விருதை வென்றார் ஷெஹான்

## ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பலர் வாழ்த்து



இலக்கியத்துக்கான உயரிய சர்வதேச விருதாகக் கருதப்படும் 'புக்கர்' பரிசை, இலங்கை நாவலாசிரியர் ஷெஹான் கருணாதிலக்க வென்றுள்ளார். 2022ஆம் ஆண்டுக்கான 'புக்கர்' பரிசு, 2011இல் அவரால் எழுதப்பட்ட இரண்டாவது நாவலான 'செவன் மூன்ஸ் ஒஃப் மாலி அல்மெய்டா'வுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஆசிரியர் பல்கலைக்கழகங்கள் விரைவில் அமைக்கப்படும்



ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் தேசிய அளவிலான பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அமைச்சின் அதிகாரிகளுடன் கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்த அமைச்சர்,

தொடர்ச்சி P2

பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் சட்டமூலம்

# 60 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் விசேட ஏற்பாடுகள் திருத்த சட்டமூல இரண்டாம் மதிப்பீடு 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பாராளுமனறத்தில் நேற்று (18) மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவால் பெற்றோலிய இரண்டாம் மதிப்பீடு சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுக்கப்பட்டதையடுத்து இடம்பெற்ற விவாதங்களின் நிறைவில், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லாவால் சட்டமூலத்தை நிறைவேற்ற வாக்கெடுப்பு கோரப்பட்டது.

தொடர்ச்சி P2

வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரின்

# மனுக்களில் திருத்தம் செய்வதற்கு அனுமதி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், தமக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவின் சட்டபூர்வமான தன்மையை எதிர்த்து, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு, உயர்நீதிமன்றம் நேற்று (18) அனுமதி வழங்கியது.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைகளின் அடிப்படையில், மேலும் பிரதிவாதிகளை சேர்க்க வேண்டியுள்ளதால் தலைப்புகளில்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நீர் இணைப்புக் கட்டணமும் எகிறியது

இதற்கமைய அரை அங்குல நீர் குழாய் கொண்ட நீர் இணைப்பிற்கான கட்டணம் இதுவரை 16 ஆயிரம் ரூபாயாக காணப்பட்ட நிலையில், தற்போது அது 27 ஆயிரத்து 200 ரூபாயாக மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் 3/4 அங்குல நீர் இணைப்பினை பெற்றுக்கொள்ள இதுவரை 30 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது புதிய இணைப்பிற்கு அமைய 51 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும். இதற்கமைய நூற்றுக்கு 70 சதவீதம் புதிய நீர் இணைப்பிற்கான கட்டணம் திருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் போராட்டம்

கண்காணித்துக்கொண்டு இருப்பதாகவும் ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளமென்ட் வூலேயும், சர்வதேச மன்னிப்புச் சபையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 60 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

இதனைத்தொடர்ந்து நடத்தப்பட்ட இலத்திரனியல் வாக்கெடுப்பில் பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் விசேட ஏற்பாடுகள் திருத்த சட்டமூல இரண்டாம் மதிப்பீட்டுக்கு ஆதரவாக 77 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் பதிவான நிலையில் 60மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்துக்கு ஆதரவாக அரசுடன் இணைந்து எதிர்க்கட்சி தரப்பிலுள்ள சுயாதீன எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிலரும் இ.தொ.கா எம்.பி.யும் வாக்களித்தனர். அதேவேளை எதிராக பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஜே .வி.பி. எதிர்க்கட்சி தரப்பிலுள்ள சுயாதீன எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிலரும் வாக்களித்தனர்.

# காணாமல் போன கப்பலுடன் தொடர்பு கொண்டது கடற்படை

குறித்த கப்பலுடன் தற்போது தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

காணாமல் போன கப்பல் தொடர்பில் அயல் நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கெப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

# புக்கர் விருதை வென்றார் ஷெஹான்

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போர் தொடர்பில் எழுதப்பட்ட குறித்த நாவலுக்கு, பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்லஸின் மனைவி கமிலா பார்க்கரினால் குறித்த விருது வழங்கப்பட்டது.

காலியில் பிறந்து நியூசிலாந்தில் தனது கல்வியைத் தொடர்ந்த 46 வயதான ஷெஹான் கருணாதிலக்க ஊடகவியலாளராக செயற்பட்டதுடன், சிறுவர் புத்தக எழுத்தாளர், திரைக்கதை எழுத்தாளர் மற்றும் பாடலாசிரியர் ஆகிய பல்வேறு விடயங்களிலும் பிரகாசித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு கிரிக்கெட் பற்றிய தனது முதல் நாவலான 'சைனாமேன்' மூலம் ஷெஹான் கருணாதிலக்க இலக்கிய உலகில் பிரவேசித்திருந்தார். 1992ஆம் ஆண்டு, த இங்கிலிஷ் பேசென்ட் என்ற நாவலுக்கு மைக்கேல் ஒண்டாச்சி புக்கர் பரிசை வென்றிருந்த நிலையில், இலங்கையில் பிறந்த எழுத்தாளர் ஒருவர் புக்கர் பரிசை வெல்வது இரண்டாவது முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் உரையாற்றிய ஷெஹான் கருணாதிலக்க ' இலங்கை சொந்தங்களே எங்கள் கதைகளை கூறுவோம் ..கூறிக்கொண்டே

**“ இலங்கை சொந்தங்களே எங்கள் கதைகளை கூறுவோம் ..கூறிக்கொண்டே இருப்போம்....**

இருப்போம்....” என நிகழ்வின் இறுதியில் தமிழில் தெரிவித்தார் என்பதும் விசேட அம்சமாகும். இந்நிலையில், எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலக்கவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் பலர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். சுதேச எழுத்துக்கலையை சர்வதேசத்திற்கு எடுத்துச் சென்று ஒரு நாவலுக்கு வழங்கப்படும் உயரிய சர்வதேச விருதான புக்கர் விருதினை தமது ஆங்கில நாவலுக்கு வெற்றிகொண்ட எழுத்தாளர் ஷெகான் கருணாதிலகவுக்கு பாராட்டுக்களை தெரிவிப்பதாகவும், அவர்கள் மென்மேலும் பல படைப்புக்களை உருவாக்க தேவையான சக்தியும் ஆற்றலும் கிடைக்க வேண்டும் என்பதே என் விருப்பம் என அவர்கள் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

# கடன் வழங்குநர் கூட்டத்தை கூட்ட ஜப்பான் முயற்சி

கூட்டத்தில் கடன் செலுத்துதல்களைக் குறைப்பது மற்றும் திருப்பிச் செலுத்தும் காலக்கெடுவை ஒத்திவைப்பது உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், இலங்கை கடன்பொறியிலிருந்து மீள்வதற்கு உதவுவதன் மூலம் சீனாவின் செல்வாக்கை குறைக்க முயல்வதும் ஜப்பானின் இந்த முயற்சியின் நோக்கம் என ஜப்பான் செய்தித்தாள் செய்திவெளியிட்டுள்ளது.

ஜப்பானிய முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக செப்டம்பர் மாத இறுதியில் ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் புமியோ கிஷிடாவுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது ஜப்பானிடம் விடுத்த கொடிக்கைக்கு அமைய இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# ரூ.3,657 பில்லியன் ஒதுக்கீடு

மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 85,625 கோடியே 4,000,000 ரூபாயும், நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு 61,393 கோடியே 7,040,000 ரூபாவும் பாதுகாப்புக்கு 53,920 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்காக சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த சபையில் நேற்று (18) சமர்ப்பித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான அரசின் செலவீனங்களில் விசேட செலவீனமாக 2,509 கோடியே 7,540,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இதில் ஜனாதிபதிக்கான செலவீனமாக 378 கோடியே 2,150,000 ரூபாயும் பிரதமருக்கான செலவீனமாக 101 கோடியே 20 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 794 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இதில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 209 கோடியே 5 இலட்சம் ரூபாவும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்துக்கு 164 கோடியே 40 இலட்சம் ரூபாவுமென மொத்தம் 373 கோடியே 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துக்கு 18 கோடியே 40 இலட்சம் ரூபாவும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்துக்கு 21கோடியே 30 இலட்சம் ரூபாவும் இந்து சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துக்கு 29 கோடியே 40 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு 61,393 கோடியே 7,040,000 ரூபாயும் பாதுகாப்பு அமைச்சுக்கு 41,000 கோடி ரூபாயும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 12,920கோடி ரூபாயுமென மொத்தமாக பாதுகாப்புக்கு 53,920 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெகுசன ஊடக அமைச்சுக்கு 2,814 கோடி ரூபாயும் நீதி ,சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சுக்கு 3,320 கோடி ரூபாயும் சுகாதார அமைச்சுக்கு 32,199 கோடியே 9,998,000 ரூபாயும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு 1,900 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுக்கு 1,445 கோடி ரூபாயும் கைத்தொழில் அமைச்சுக்கு 820 கோடியே 80இலட்சம் ரூபாயும் கடற்றொழில் அமைச்சுக்கு 645 கோடி ரூபாயும் சுற்றாடல் அமைச்சுக்கு 222கோடியே 20 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிர்,சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்கு 1,520 கோடி ரூபாயும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுக்கு 367 கோடியே 60 இலட்சம் ரூபாயும் தொழில்நுட்ப அமைச்சுக்கு 1,156 கோடி ரூபாயும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சுக்கு 725 கோடியே 10 இலட்சம் ரூபாயும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு 687 கோடியே 30 இலட்சம் ரூபாயும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுக்கு 1,020 கோடி ரூபாவும் நீர்ப்பாசன அமைச்சுக்கு 8,390கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது

# மனுக்களில் திருத்தம் செய்வதற்கு அனுமதி

திருத்தங்களை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு, மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய மன்றில் கோரிநின்றார்.

அவரின் கோரிக்கைக்கு அனுமதி வழங்கிய எஸ்.துரைராஜா, ஷிரான் குணரத்ன மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம், திருத்தங்கள் குறித்த ஆட்சேபனைகளை இருப்பின் அவற்றை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

மேலும், திருத்தப்பட்ட மனுவில் குறிப்பிடப்படும் புதிய பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளுக்கு அறிவித்த நீதியரசர்கள் குழாம், மனுக்களை நவம்பர் 10ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

வசந்த முதலிகே, வெல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ஹஷான் ஜீவந்த குணதிலக்க ஆகியோர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து மனுக்களை தாக்கல் செயதுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தின் பணிப்பாளர் காவிந்த பியசேகர, பயங்கரவாத புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் பிரசன்ன அல்விஸ், சட்டமா அதிபர் உட்பட பலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவுகளின் கீழ் தம்மைக் கைதுசெய்து தடுத்து வைத்திருப்பது சட்டபூர்வ தன்மையை மனுதாரர்கள் சவாலுக்கு உட்படுத்தியுள்ளனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தம்மை, சட்டத்தின் அடிப்படையில் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

# பிரியமாலியின் வர்த்தக பங்காளிக்கு விளக்கமறியல்

வழங்க வேண்டாம் என்று குற்றப் புலனாய்வு திணைக்களம் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான் மேற்குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்தார்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்வதாக கூறி சந்தேகநபர்களான திலினியும் காதலனும் தன்னிடம் 60,000 அவுஸ்திரேலிய டொலர்கள், 100,000 அமெரிக்க டொலர்கள் மற்றும் ஒரு கிலோ கிராமுக்கும் அதிகமான தங்கத்தை மோசடி செய்துள்ளதாக கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர், சீ.ஐ.டியில் முன்னர் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரிப்பற்காக சீ.ஐ.டிக்கு அழைக்கப்பட்டிருந்த இசுரு பண்டார என்ற நபர், 9 மணி நேர விசாரணைகளின் பின்னர், நேற்று முன்தினம் (17) மாலை கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரியமாலியுடன் இணைந்து பணத்தை மோசடி செய்து, இந்த பண மோசடிக்கு உதவிய குற்றச்சாட்டில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பலம் வாய்ந்த முன்னாள் அமைச்சரின் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றிய அவர், பின்னர் திலினி பிரியமாலியுடன் நெருங்கிய உறவைப் பேணி, சிறிது காலம் அவரது காதலராக இருந்ததாகவும் தெரியவருகிறது.

பல்வேறு வர்த்தகர்கள் மற்றும் அரசியல்வாதிகளிடம் 100 கோடி ரூபாய்க்கு மேல் மோசடி செய்த குற்றச்சாட்டு குறித்து கைதுசெய்யப்பட்ட திலினி பிரியமாலி, இன்று (19) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் பல்கலைக்கழகங்கள் விரைவில் அமைக்கப்படும்

இவ்விடயம் தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை தயாரிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாவும் தெரிவித்தார்.

கல்லூரிகளை பல்கலைக்கழக மட்டத்துக்கு கொண்டு வருவதற்கான பல கோரிக்கைகள் தம்மிடம் இருந்ததாகவும் இது குறித்த பூர்வாங்க கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆசிரியர் தொழிலுக்கான தேசிய அளவிலான பல்கலைக்கழகங்களை அமைக்கவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அது நிறுவப்பட்டதும் பாடங்களின் வகைக்கு ஏற்ப பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றார்.

மூன்று வருட கல்வி மற்றும் ஒரு வருட ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டதும், நான்கு வருடங்களில் தகுதியான ஆசிரியர்கள் வகுப்பறைகளுக்கு நுழைவார்கள் என்று குறிப்பிட்ட அமைச்சர், இதை தவறாக புரிந்து கொள்ளவேண்டாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஓட்டோ கட்டணங்களை குறைக்க வேண்டும்

வேண்டுமென மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையிலிருந்து கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய (18) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரையறுக்கப்பட்ட அளவிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. எனவே, எரிபொருளுக்கான தேவையை நூற்றுக்கு நூறு சதவீதம் நிறைவேற்ற முடியாது. மேற்குலக நாடுகளிலும் தற்போது எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனை பார்க்கும்போது எதிர்காலத்தில் இலங்கைக்கும் பிரச்சினைகள் இருக்கிறன என்பது தெரிவதாகவும் கூறினார்.

முழுநேர ஓட்டோ சாரதிகளை இனங்காண்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சுமார் 3 இலட்சம் பேர் முழுநேர ஓட்டோ சாரதிகளாக இருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு ஒருவாரத்துக்குள் கோட்டா முறையில் வழங்கப்படும் எரிபொருளின் அளவை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

# நல்லிணக்கம் தொடர்பாக அமைச்சரவை உபகுழு

பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக ஜனாதிபதியின் தலைமையில் நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்காக ஜனாதிபதி அமைச்சரவையில் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த உப குழுவில், பிரதமர் தினேஷ் குணவர்தன, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பகுதிகளிலும் சகல மக்கள் மத்தியிலும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தி தாம் விரும்பிய சகல பகுதியிலும் மக்கள் வாழக்கூடிய சூழலை உருவாக்குவது இதன் நோக்கம் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று (18) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவை உபகுழுவில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு மேலதிகமாக தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் இருவர் எதிர்காலத்தில் நியமிக்கப்படுவர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# மக்கள் போராட்டம் கலவரமாக வெடிக்கும்

பாரிய விளைவுகளை தோற்றுவிக்குமென பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் விசேட ஏற்பாடுகள் (திருத்தம்) சட்டமூலம் மீதான நேற்றய (18) விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

திட்டமிட்ட வகையில் வலுசக்தி துறை நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளது. எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் இச்சட்டமூலம் இயற்றப்படுவதை கறும் புள்ளியாக குறிப்பிட வேண்டும்.

நாட்டில் தற்போது எந்த பிரச்சனையும் இல்லை என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.மக்கள் போராட்டம் முடிவடையவில்லை. சற்று தணிவடைந்துள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்ெ ன்றார்.

# 663 பில்லியன் ரூபாயால் அரச கடன் அதிகரிக்கிறது

ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் (17) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு உடனடி அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். நேற்று (18) அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த ஆண்டுக்காக அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய கடன் எல்லையாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள தொகையானது 3,844 பில்லியன் ரூபாயாகும். இந்த தொகைக்கு மேலதிகமாக எம்மால் கடன்களை பெற்றுக்கொள்ள முடியாது. எனவே அரச நிதி முகாமைத்துவதை கையாளும் விதமாக மேலதிகமாக 663 பில்லியன் ரூபாயால் அரச கடன் பெரும் தொகையை அதிகரிக்க ஜனாதிபதி முன்வைத்த அமைச்சரவை பத்திரம் அன்றைய தினமே நிறைவேற்றப்படுவதாக கருதி உடனடி அனுமதி பெற்றப்பட்டுள்ளது என்றார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# நாடு வங்குரோத்தடைய காஞ்சனவே காரணம்



இலங்கை வங்குரோத்தடைய மின்சக்தி, வலுசக்தி அமைச்சே பிரதான காரணமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி சபையில் தெரிவித்தார். நாட்டை வங்குரோத்தடையச் செய்த அமைச்சராகவே மின்சக்தி, வலுசக்தி அமைச்சரை பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான மேலதிக வினாவை முன்வைத்து தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கப்போவதாக அமைச்சர் கூறுகிறார். இதற்கு அதிகளவான அதிகாரிகளைக் கொண்ட குழுவையும் காஞ்சன விஜேசேகர நியமித்துள்ளார். அதிகாரிகள் எடுத்த தீர்மானங்களால் இலங்கை மின்சார சபை நட்டமடையவில்லை; அரசியல்வாதிகளின் தீர்மானமே நட்டத்துக்கு காரணம் என்றார்.

# வலுசக்தி துறை நெருக்கடிக்குள்



அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் வலுசக்தி துறை தற்போது நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. 2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியால் நிறைவேற்ற முடியாததை, இன்று பொதுஜன பெரமுனவுடன் ஐக்கிய தேசிய கட்சி நிறைவேற்றவுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோக கட்டமைப்பின் சிக்கல், சமூக கட்டமைப்பிலும் பல்வேறு வழிமுறைகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நெருக்கடியை முன்னிலைப்படுத்தி அரச நிறுவனங்களையும்,சொத்துகளையும் தனியார் தரப்பினருக்கு விற்பது ஒன்றும் புதிய விடயமல்ல. வலுசக்தி துறையிலும் அரசாங்கம் அதனையே செய்ய முனைகிறது. எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு, சர்வதேச நிறுவனங்களுக்கு எரிபொருள் இறக்குமதிக்கு அனுமதி வழங்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதனால் நாட்டில் எரிபொருள் கட்டமைப்பில் பாரிய போட்டித்தன்மை ஏற்படும்.

2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி நிறைவேற்ற முயன்றதை தற்போது அக்கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொதுஜன பெரமுன நிறைவேற்ற தீர்மானித்துள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாடுகளை சுட்டிக்காட்டியே பொதுஜன பெரமுன ஆட்சியமைத்தது. ஐக்கிய தேசிய கட்சி விற்ற தேசிய வளங்களை மீள பெறுவதாக குறிப்பிட்டே முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். ஆனால், தற்போது பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஐக்கிய தேசிய தமது நீண்டகால நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளவுள்ளது என்றார்.

# வங்குரோத்து அமைச்சே எனக்குக் கிடைத்தது



மின்சக்தி, வலுசக்தி அமைச்சை நான் பொறுப்பேற்றுக் கொண்டதால் இலங்கை மின்சார சபை நட்டமடையவில்லை என சபையில் தெரிவித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர, வங்குரோத்தடைந்த அமைச்சையே தான் பொறுப்பேற்றதாகவும் தெரிவித்தார்.

வங்குரோத்தடைந்ததைக் கட்டியெழுப்புவதற்கே நான் இதனை பொறுப்பேற்றுள்ளேன். மின்சார சபையை மறுசீரமைக்க நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அதிகாரிகள் மீது முன்வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பில் கவலையடைவதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திறமையானவர்களே இக்குழுவில் நியமிக்கப்பட்டு உள்ளதாகவும், குழுவின் அறிக்கை கிடைக்கும் வரையில், தான் அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார். இவ்வார இறுதியில் இக்குழுவின் அறிக்கைக் கிடைக்கும். இக்குழுவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களது ஆலோசனைகளை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

# 4 மில்லியன் ரூபாயை இழப்பீடு



மலையக தொழிலாளர்கள் அடிமைகளாக இருப்பதாக ஐ.நா கூறுமாக இருந்தால், அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல வருடங்களாகப் பாராளுமன்றத்தில் உள்ள வேலுகுமார் எம்.பி அதற்காக வெட்கப்பட வேண்டுமென தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வின்போது உரையாற்றிய வேலுகுமார் எம்.பி, தொழிலாளர்கள் இன்னும் இந்நாட்டில் அடிமைகளாகவே இருப்பதாக ஐ.நாவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனையே நாமும் கூறிவருகிறோம். இதற்கு தொழில் அமைச்சர் வழங்கப்போகும் பதில் என்ன எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, மலையக மக்களை பிரதிநிதிதுவப்படுத்தி பல வருடங்களாக சிலர் பாராளுமன்றத்தில் இருக்கிறார். ஆனால், மலையக மக்கள் அப்படியே இருக்கிறார்கள். எந்த மாற்றமும் இல்லை. இன்னும் லயன் அறைகளிலேயே இருக்கிறார்கள். தொழிலாளர்கள் அடிமைகளாக இருப்பதாக ஐ.நா கூறுமாக இருந்தால், அதற்காக வேலுகுமார் போன்ற அம்மக்களின் பிரதிநிதிகள் வெட்கப்பட வேண்டும்.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் பணிப்புரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த பெருந்தோட்டத் தொழிலாளிக்கு அவர் தொழில்புரிந்த நிறுவனம் நான்கு மில்லியன் ரூபாயை இழப்பீடாக வழங்க வேண்டுமென தான் அறிவுறுத்தியுள்ளதாகவும் இதேவேளை, தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



பிரதமர் பதவியை ஏற்றிருந்தால்

# ரணிலின் நிலையே சஜித்துக்கும்

ஒருவேளை இந்த அரசாங்கத்தில் பிரதமர் பதவியை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எடுத்திருந்தால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப்போல பூனைக்குட்டியாகவே சஜித் இருந்திருக்க நேர்ந்திருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரதமர் பதவியை ஏற்காதது மொட்டுக் கட்சியினருக்கு பெரும் வருத்தமாக இருக்கிறது. ஒருவேளை சஜித் பிரதமர் பதவியை ஏற்றிருந்தால், எமக்குப் பெரும்பான்மை இல்லை என்பதால் மொட்டுக் கட்சியின் திருடர்களுடனேயே செயற்பட வேண்டியிருந்திருக்கும்.

அவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட்டிருந்தால் ஜனாதிபதி ரணில் தற்போது பூனைக்குட்டிபோல எவ்வாறு செயற்படுகிறாரோ அவ்வாறே சஜித்தும் இருந்திருக்க வேண்டும்.

சஜித் தூய்மையான அரசியலை செய்பவர் என்பதால், திருடர்களுடன் கூட்டணி வைக்கவில்லை. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட அரச நிறுவனங்களை தங்களது தீர்மானங்கள் ஊடாக நாசம் செய்த அமைச்சர், இராஜாங்க அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கோபாவிற்கு

# சிறிதரன் எம்.பி நியமனம்



அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிலிருந்து (கோபா) தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா. சாணக்கியன் இராஜினாமா செய்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற சபாநாயகரின் அறிவித்தலின் போதே அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிலிருந்து (கோபா) தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா.சாணக்கியன் இராஜினாமா செய்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

சாணக்கியன் எம்.பி. இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட அவரது வெற்றிடத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறிதரன் நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

பூகோள அரசியலில்

# மீண்டும் மீண்டும் பிழையான வழிமுறையை பின்பற்ற வேண்டாம்



பூகோள அரசியல் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் மீண்டும் மீண்டும் பிழையான வழிமுறைகளைப் பின்பற்றி நாட்டை நெருக்கடிக்குள் கொண்டு செல்கின்றது என்றும், அந்த வகையில் வடக்கில் முதலீடுகள் என்ற போர்வையில் சீன இராணுவம் பல்வேறு இடங்களில் தரித்து நிற்பதாக கூறப்படும் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் தகுந்த அறிவிப்பை வெளியிட வேண்டும் என்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுக்குமார் தெரிவித்தார்.

வடக்கில் சீன இராணுவம் பல்வேறு இடங்களில் முதலீடுகள் என்ற போர்வையில் தரித்து நிற்கின்றதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பெட்ரோலியப் உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், 'இந்து' பத்திரிகையில் செய்தியொன்று வெளியாகியுள்ளது. பூகோள அரசியல் தொடர்பில் தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கமானது தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் பிழையான அணுகுமுறைகளை எடுத்து, நாட்டை சிக்கலான நிலைக்கு தள்ளியுள்ளது. சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட உரம் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டது. ரஷ்யாவின் விமான சேவை தடுத்து நிறுத்தப்பட்டமையால் சிக்கல் ஏற்பட்டது. இந்நிலையில் 'இந்து' பத்திரிகையில் வடக்கு பிரதேசங்களில் சீன இராணுவம் பல்வேறு இடங்களில் முதலீடுகள் என்ற போர்வையில் தரித்து நிற்கின்றது என்ற செய்தி ளியிடப்பட்டுள்ளது. இந்திய புலனாய்வுத்துறையினர் தமிழ்நாட்டுக்கு இதன்மூலம் அச்சுறுத்தல் இருப்பதாக பல்வேறு துறையினருக்கும் அறிவித்துள்ளனர். இதனால் இது பெரும் சர்ச்சையை தோற்றுவிக்கின்றது. பூகோள அரசியலில் தவறான வழிமுறையை நிறுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இது தொடர்பில் ஜனாதிபதி, அரசாங்கம் தகுந்த அறிவித்தலை விடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# இஸ்லாம் பாடப்புத்தகங்கள் அடுத்த வருடமே கிடைக்கும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



இஸ்லாம் பாடப்புத்தகங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அப்புத்தகங்கள் மீளப் பெறப்பட்டிருப்பதாக சபையில் தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அடுத்த வருடம் அப்பாடப்புத்தகங்கள் திருத்தங்களுடன் மீள ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (18) அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானின் கேள்விக்கு பதிலளிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்ட அதிகாரிகளால் உருவாக்கப்பட்ட இஸ்லாம் பாடப் புத்தகங்கள் 2021, 2022ஆம் ஆண்டுகளில் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. ஆனால், நாட்டில் காணப்படும் இன, மதவாதங்களால் 6 - 11 வகுப்பு மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட இஸ்லாம் பாடப் புத்தகங்கள் மீள திரும்பப் பெறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்தார்.

இன, மதவாதமில்லாத நேர்மையான கல்வி அமைச்சர் என்கிற வகையில் மீள திரும்பப் பெறப்பட்டுள்ள இஸ்லாம் பாடப் புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர், திருத்தங்களை மேற்கொள்வதற்காக இஸ்லாம் பாடப்புத்தகங்கள் மீள திரும்பப் பெறப்பட்டுள்ளன. அதில் திருத்தங்களை மேற்கொண்டு அவற்றை மீள அடுத்த வருடம் ஒப்படைப்போம் எனவும் தெரிவித்தார்.

> **“ திருத்தங்களை மேற்கொள்வதற்காக இஸ்லாம் பாடப்புத்தகங்கள் மீள திரும்பப் பெறப்பட்டுள்ளன. அதில் திருத்தங்களை மேற்கொண்டு மீள அடுத்த வருடம் ஒப்படைப்போம்**

# போதைக்கு அடிமையானவர்களுக்கு யாழில் புனர்வாழ்வு நிலையம்

■ எம். றொசாந்த்

வடபகுதியில் போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கு, யாழ். நகருக்கு அண்மையில் புனர்வாழ்வு நிலையம் அமைக்க, முயற்சி மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாண மாநகர மேயர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

'பப்ரல்' அமைப்பின் மாற்றத்துக்கான பாதை கற்கை நெறியின் யாழ். மாவட்ட பெண்கள் குழு நடத்திய, 'போதையால் பாதை மாறும் இளையோரை நல்வழிப்படுத்தி நற்பிஜைகளாக உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வு நேற்று (18) திருநெல்வேலி முத்துதம்பி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வு செயற்பாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, யாழ். மாநகர மேயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

போதைப் பொருள் வர்த்தகர்களின் பிரதான இலக்காக, பாடசாலை மாணவர்கள்தான் இருக்கின்றார்கள். இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பாரிய கடப்பாடு, ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது.

இந்தப் போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாகாதவாறு மாணவர்களை எவ்வாறு பாதுகாப்பது தொடர்பில், விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலைக்கு அனுப்புவதன் மூலம், அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவதன் மூலம், அவர்களை சமூகத்தோடு ஒருங்கிணைக்க முடியும்.

எனவே, யாழ். நகருக்கு அண்மையில் ஓர் இடத்தில் புனர்வாழ்வு நிலையத்தை அமைப்பதற்கு தீர்மானித்திருக்கிறோம். அதற்குரிய முயற்சியை எடுத்து வருகின்றோம். அனைவரின் ஒத்துழைப்புடன் அந்த விடயம் விரைவில் கைகூடும் எனத் தெரிவித்தார்.



## எரிபொருள்கோரி வங்காலை மீனவர்கள் போராட்டம்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார், வங்காலை கிராம மீனவர்கள் நேற்று (18) உரியமுறையில் மண்ணெண்ணெய் வழங்க கோரி, மன்னார் நகரில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மன்னார் பிரதான பாலத்தடி யில் ஒன்று சேர்ந்த வங்காலை கிராம மீனவர்கள், மன்னார்-பள்ளிமுனை பிரதான வீதியில் உள்ள மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்துக்கு ஊர்வலமாக சென்று, தமது கோரிக்கை மகஜரைக் கையளித்தனர். தொடர்ந்து, மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு ஊர்வலமாகச் சென்று, தமது கோரிக்கை மகஜரை அரச அதிபரிடம் கையளித்தனர்.

வங்காலை கிராமத்தில் மீனவர்களுக்கு, 10 நாள்களுக்கு ஒரு தடவை 5 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. ஒரு படகில் தொழிலுக்கு சென்று வர, ஒரு நாளைக்கு குறைந்தது 50 லீற்றர் தேவைப்படுகிறது.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. அதை 800 ரூபாய் கொடுத்து வாங்கி தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எங்களுடைய மீனவ அமைப்புக்கு 340 ரூபாய்க்கு எண்ணை வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் மூதாட்டியை வன்புணர்ந்தவர் தலைமறைவு

■ எம். றொசாந்த்

மனம்நலம் குன்றிய 66 வயதான மூதாட்டியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், 40 வயதான நபர் ஒருவரை 10 நாள்களாக பருத்தித்துறை பொலிஸார் தேடிவருகின்றார்கள்.

ஞாயிற்றுக்கிழமை (09) பாதிக்கப்பட்ட மூதாட்டியின் வீட்டுக்கு முன்பாக, வாகன ஹோர்னை அடித்து, மூதாட்டியை அழைத்துள்ளார். மூதாட்டி வெளியே வந்ததும் அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். சத்தம் கேட்டு வெளியே வந்த 70 வயதான மூதாட்டியின் சகோதரியையும் அடித்து காயப்படுத்தி விட்டு சந்தேகநபர் தப்பி சென்றுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர், தலைமறைவாகி உள்ளார் எனவும் அவரைக் கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சந்தேகநபர், கொலை, போதைப்பொருளை தொடர்பான குற்றச்சாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போதைக்கு அடிமையான இளைஞனால்

## மாணவி துஸ்பிரயோகம்

■ எம். றொசாந்த்

போதைக்கு அடிமையான 25 வயதான இளைஞனால் 15 வயது மாணவி பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: பாதிக்கப்பட்ட மாணவியும் இளைஞனும் காதலித்து வந்துள்ளனர். இளைஞன் போதைக்கு அடிமையானதால், மாணவி காதலைத் துண்டித்துள்ளார்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (16) பாதிக்கப்பட்ட மாணவியும் அவரது சகோதரியும் தனியார் வகுப்புகளை முடித்துக்கொண்டு, வீட்டுக்கு சென்றவேளை, குறித்த இளைஞன் ஆள்நடமாட்டம் அற்ற பகுதியில், மாணவியை வழிமறித்து, அருகில் இருந்த கட்டத்துக்கு இழுத்துச் சென்றுள்ளார்.

அங்கிருந்து தப்பித்த மாணவியின் சகோதரி உறவினர்கள் , அயலவர்களை குறித்த பகுதிக்கு அழைத்து வந்துள்ளார். இதனை அவதானித்த இளைஞன் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில், மாணவியின் உறவினர்களால், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தந்தத்துக்காக தும்பிக்கை அறுத்து யானை கொலை

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஐயம்பெருமாள் பிரதேசத்தின் காட்டுப் பகுதியில், யானையின் தும்பிக்கை வெட்டப்பட்ட ஞாயிற்றுக்கிழமை (16) வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தால் அதன் உடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

யானையின் தந்தத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன், குறித்த யானை தும்பிக்கை வெட்டப்பட்டு கொல்லப்பட்டு இருக்கலாம் என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கருதுகின்றனர். இதுதொடர்பாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் திணைக்களத்தினர் தெரிவித்தார்கள்.

வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின்

## நடமாடும் சேவை

■ எம். றொசாந்த்

வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் (22,23) யாழ்ப்பாணம், கைதடியில் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

வட மாகாணத்தில் சேவையில் ஈடுபட்டு வரும் பஸ்களுக்கான வருடாந்த வருமான வரி பத்திரத்தைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளை அதன் உரிமையாளர்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வருகின்றார்கள். இந்த இடர்பாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக, இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில், கொழும்புக்குச் சென்று மேற்கொள்ள வேண்டிய அனைத்து சேவைகளையும் இங்கே ஓரிடத்தில், ஒரே நாளில் பெற்றுக்கொள்ள முடியும் என வடமாகாண தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் சி. சிவபரன் தெரிவித்தார்.

## மன்னாரில் சுயதொழில் ஊக்குவிப்பு சந்தை

மன்னார் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில், மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் வழிநடத்தலின் கீழ், பிரதேச செயலக முன் வளாகத்தில் விற்பனைச் சந்தை நேற்று முன்தினம் (17) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த உள்ளூர் உற்பத்தி சந்தையை, மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஏ. ஸ்டான்லி டிமெல் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். இந்தச் சுயதொழில் ஊக்குவிப்பு சந்தையில், மன்னாரில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தார்கள்.

எஸ். றொசேரியன் லெம்பேட்











கனகர் கிராம மக்கள் 32 வருடங்களுக்குப் பின்னர்

# பூர்வீக காணிகளில் குடியேறினர்

### கிழக்கில் 50,000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் ஆக்கிரமிப்பு

■ வி.ரி சகாதேவராஜா, ஆர். ஜெயஸ்ரீராம்

அம்பாறை மாவட்டத்தின் கனகர் கிராம மக்கள் 32 வருடங்களுக்குப் பின்னர் தங்களது பூர்வீக் காணிகளில் குடியேறியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தத்தின் காரணமாக, இடம்பெயர்ந்து மீளக்குடியேறுவதற்கு பல்வேறு எதிர்ப்புகளைச் சந்தித்த மக்கள், தற்போது தமது காணிகளை தாமாகவே முன்வந்து துப்புரவு செய்து வருகின்றனர்.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் பங்களிப்புடன் சர்வதேச உணவு தினத்தை முன்னிட்டு, மேற்படி கிராமத்தின் காணிகளில் தானியச் செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது. தமது பூர்வீக காணிகளை துப்புரவு செய்துள்ள 25 பயனாளிகள், தானியச் செய்கைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பயறு, சோளன், கச்சான் ஆகிய தானிய வகைகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, அம்மக்களின் காணிகளில் அவர்களின் இருப்பை உறுதிப்படுத்தித் தரக்கோரி அரச திணைக்களங்களுக்கும் பரிந்துரை செய்யும் செயற்பாடு திட்டமிடப்பட்டது. இருந்தபோதிலும் அரசதிணைக்களங்கள், மக்கள் மீளக்குடியேறுவதற்கு எதிர்ப்பாக உள்ளமையால் மக்களாகவே முன் வந்து குடியேறியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு தரப்பினராலும் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு உள்ளது சுமார் 50,000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் அரசு மற்றும் பல்வேறு தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## கலாசார விழாவும் இலக்கிய விழாவும்

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் ஒன்றிணைந்து நடத்திய, கலாசார விழாவும் இலக்கிய விழாவும் நந்தகோபன் கலாசார மண்டபத்தில், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக



மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரனும் சிறப்பு அதிதியாக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்தும் கௌரவ அதிதிகளாக சுகாதார வைத்திய அதிகாரி த. பிரபாசங்கர், பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி எல். விவேகானந்தராஜ், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி எம். ஜெயசந்திரன் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வில் 'சிகரம்' நூல் வெளியீடும் எட்டு கலைஞர் கௌரவிப்பும் மாணவர்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

க. விஜயரெத்தினம்

## 'கட்ராக்' இலவச சிகிச்சை முகாம்

■ எம். எஸ். எம் நூர்தீன்

கண்களில் படர்ந்துள்ள வெண் படலத்தை (கட்ராக்) அகற்றுவதற்கான இலவச சத்திர சிகிச்சை முகாம், காத்தான்குடி பள்ளிவாயில்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, இலவச கண் சத்திர சிகிச்சை முகாமுக்கு வெளிநாட்டைச் சேர்ந்த கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் பலர் பங்கேற்கவுள்ளார்கள். அந்தவகையில், கண்களில் வெண்படலம் படர்ந்துள்ள நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சைக்கு முன்பாக, பல மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தங்களது கண்களிலுள்ள வெண் படலம் தொடர்பான மருத்துவ அறிக்கையின் பிரதிகளினை, சம்மேளன அலுவலகத்தில் காரியாலய நேரங்களில் சமர்ப்பித்து, தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலதிக தகவல்களை பெற்ற 065 2246603 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நகைக்கடைக்காரர் மீது கைக்கோடரியால் தாக்குதல்

■ ஆர். ஜெயஸ்ரீராம்

வாழைச்சேனை சந்தைப் பகுதியில் உள்ள நகைக்கடையில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற கைகலப்பில் நகைக்கடைக்காரர் கைக்கோடரியால் தாக்கப்பட்ட நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்ன,ர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஆறு மாதங்களுக்கு முன்னர், வாகரையைச் சேர்ந்த குடும்பஸ்தர், மேற்படி நகைக்கடையில் இரண்டு தங்க நகைகளை வெவ்வேறாக அடகு வைத்துள்ளார். அதில் ஒரு நகையைத் திரும்ப பெற்றுக் கொள்ளும் வையில் கிடைக்கும் பணத்தைச் செலுத்தி வந்துள்ளார்.

சம்பவம் தினம், மீதியாக செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்திய பின்னர், நகையைக் கையளிக்குமாறு கேட்டபோது, நகைக்கடைக்காரர் திரும்பிக் கொடுக்க மறுத்துள்ளார்.

இதையடுத்து, இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம், கைகலப்பாக மாறி, பின்னர் கைக்கோடரியால் நகைக்கடைக்காரர் தாக்கப்பட்டதாகவும் தாக்குதலை மேற்கொண்டவர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு நேரடியாகச் சென்று சரணடைந்துள்ளதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்ததாக பெலிஸார் தெரிவித்தனர்.

## கல்முனையில் போசாக்கான பிஸ்கட்டுகள் அறிமுகம்


■ நூருல் ஹுதா உமர்

கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ நபீலின் மருந்து உற்பத்திப் பிரிவால் தயாரிக்கப்பட்ட போசாக்கான பிஸ்கட்டுகள் விஸ்கட்டுக்கள், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் பரிசீலனைக்காக போசாக்கான விஸ்கட்டுக்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம் ஹனிபா, திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம் மாஹிர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்தியர் ஏ.ஆர் நியாஸ், நிர்வாக உத்தியோகத்தர் கே.ஏ ஜப்பார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





தோட்டப் பகுதிகளில் பாடசாலைகளுக்கு

# மாணவர்கள் செல்வது குறைவு

■ பா.நிரோஸ்

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களில் உள்ள தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, தலைமையில் நேற்று (18) காலையில் கூடியது. அதன்பின்னர் வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான நேரத்தில், பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவின் கேள்விக்கு பதிலளித்து கருத்துரைக்கும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கல்வி அமைச்சின் முழு ஒத்துழைப்போடு தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் தொடர்பில் ஆராயுமாறு கல்வி இராஜாங்க அமைச்சருக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இறுதிக்குள் தோட்டப் பகுதிப் பாடசாலை மாணவர்களின் போசாக்கு மட்டத்தை 50 சதவீதத்தை விட அதிகரிக்கவே எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# ‘பாலம்’ சஞ்சிகை வெயீடு

■ மொஹொமட் ஆஸிக்

‘பாலம்’ என்ற சஞ்சிகையின் வெளியீட்டு விழா கண்டி, பொல்கொல்ல தேசிய கூட்டுறவு கல்வி நிறுவன கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) நடைபெற்றது

‘சையில்ட் கெயார் பாத் லங்கா’ நிறுவனத்தின் தலைவர் காமினி ரத்ன திஸ்ஸ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில். மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களின் இளைஞர் பங்கேற்பு திட்டத்தின் கீழ் இந்தச் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

இன ஐக்கியத்துக்கு வித்திடும் மேற்படி செயற்றிட்டத்துக்கான அனுசரணையை வழங்கும் ‘எல்விட்டாஸ்’ நிறுவனத்தின் கண்டி மாவட்ட இணைப்பாளர் ரமேஸ் குமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

முதற்பிரதியை ‘சையில்ட் கெயார் பாத் லங்கா’ நிறுவனத்தின் தலைவர் காமினி ரத்ன திஸ்ஸவிடமிருந்து அவர்பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதியை கல்ஹின்ன மத்ரசதுல் பலாஹ் அரபிக் கல்லூரி விரிவுரையாளர் மௌலவி எம்.எஸ்.எம்.மிர்சாத் பெற்றுக் கொண்டார்.




# QR யை கூட்டினால் கொடுக்க தயார்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

திங்கட்கிழமை (17) இரவு 9 மணிமுதல் டீசல் மற்றும் பெட்ரோல் விலைகள் குறைக்கப்பட்டமையை இட்டு பெரும் சந்தோஷம் வெளியிட்டுள்ள வாகன உரிமையாளர்கள், அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தை வரவேற்றுள்ளனர்.

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும், எரிபொருட்களை கொள்வனவு செய்வதற்கான QR முறைமையின் ஊடாக வாரத்துக்கு விநியோகிக்கப்படும் எரிபொருட்களின் லீற்றர் போதுமானதாக இல்லை என்றும் வாகன உரிமையாளர்களும் சாரதிகளும் தெரிவித்தனர்.



QR முறைமையின் ஊடாக வாரத்துக்கு விநியோகிக்கப்படும் எரிபொருட்களின் லீற்றர் அதிகரிக்கப்படுமாயின் அவற்றின் இலாபத்தை நுகர்வோருக்கு வழங்க தாங்கள் தயாராக இருப்பதாக தனியார் பஸ் உரிமையாளர்களும், ஓட்டோ சாரதிகளும் தெரிவித்தனர்.

# நாயின் செயலால் குதூகலித்த குடும்பம்

■ ஷேன் செனவிரத்ன

வீட்டில் வளர்க்கும் நாயொன்று செய்த நல்ல செயலால் அந்த குடும்பமே குதூகலித்த சம்பவம், கண்டி அலதெனிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு வெளியே கடந்த 15ஆம் திகதி, இரவு வேளையில் வெளியே சென்றிருந்த அந்த நாய், கடையொன்றுக்கு முன்பாகவுள்ள வீதியில் விழுந்துகிடந்த பணப்பையை கௌவிக்கொண்டுவந்து, தன்னுடைய கூடாரத்துக்கு அருகில் போட்டுவிட்டுள்ளது.

செருப்பு மற்றும் பிளாஸ்டிக் பொருட்களைக் கடிக்கும் அந்த நாய், அந்தப் பணப்பையை மட்டும் கடித்து சேதப்படுத்தாது, முன்னங்கால்கள் இரண்டிலும் அழுத்தி பிடித்துக் கொண்டிருந்துள்ளது.



எனினும், வீட்டின் உரிமையாளர்கள் அந்தப் பையை நாயிடமிருந்து மீட்டெடுத்து, அதனை திறந்து பார்த்துள்ளனர். அதில், 7ஆயிரம் ரூபாய் பணமும் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் பெறுமதியான தங்கச் சங்கிலியும் இருந்துள்ளது.

அத்துடன் அந்த பணப்பையில் இருந்த தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்ட வீட்டு உரிமையாளர், உரிமையாளரை வீட்டுக்கு அழைத்து அந்தப் பணப்பையை கையளித்துள்ளார். இதுதொடர்பில் அலதெனிய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் அறிவித்துள்ளார்.

பொலிஸாருடன் வீட்டுக்கு வந்த பணப்பையின் உரிமையாளர் அதனை பெற்றுச்சென்றுள்ளார்.

# முற்பணத்தில் முறைகேடு; போராட்டம் முன்னெடுப்பு

■ வெ.பெருமாள்

மஸ்கெலியாவில் ஆர். பி. கோ. கம்பனியின் கீழ் இயங்கும் சாமிமலை, மல்லியப்பு டீசைட் போன்ற இரு பிரிவுகளை சேர்ந்த சுமார் 400 தொழிலாளர்கள் தோட்ட பிரதான காரியாலயத்துக்கு முன்பாக நேற்று (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தீபாவளி பண்டிகை முன்பணமாக 15,000 ரூபாய் வழங்க தோட்ட நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தீபாவளிக்கு இன்னும் ஆறு நாள்களே இருக்கின்றன நிலையில், தீபாவளி முற்பணம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாயை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதும் குறித்த தோட்ட நிர்வாகம் வேலை நாள்களுக்கு அமைய 5,000 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதுள்ளதாக தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாக, நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் தாம் தீபாவளி திருநாளை கொண்டாடுவது எப்படி என்று குறித்த தோட்ட தொழிலாளர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

# “மொட்டுவை சுத்தம் செய்யனும்”

■ மஹேஸ் கீர்த்திரத்ன

தற்போதைய சூழ்நிலையில் நடத்தப்படும் எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுக்க தாமரை மொட்டுவைச் சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தயாராகவே இருப்பதாக தெரிவித்த விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க, எனினும், கட்சியிலிருந்து பலரும் விலகிச்சென்றுள்ளமையால் தற்போதைய நிலையில் கட்சியை சுத்தம் செய்யவேண்டும் என்றார்.

மாத்தளையில் கட்சிக்காரியாலயத்தில் நடைபெற்ற, கட்சி அங்கத்தவர்களுடனான சந்திப்பின் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலில் எமது கட்சியின் ஊடாகப் போட்டியிட்டால் தங்களுக்கு வெற்றிபெற முடியாதென நினைத்த பலரும் விலகிச் சென்றுவிட்டனர். அவ்வாறானவர்கள் ஏனைய கட்சிகளுக்கு ஆதரவளித்து அரசாங்கத்துக்கு எதிரான பல்வேறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்கள் பெரும் கட்சிகளுடன் இணையாமல், முடிந்தால் சிறிய, சிறிய கட்சிகளை இணைத்துக்கொண்டு தேர்தலில் போட்டியிடுமாறு நான், அவர்களுக்கு சவால் விடுக்கின்றேன்.

அவர்களால் வெற்றிப்பெற முடியாது. ஜனாதிபதியின் தெரிவின் போதும் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகப் பலரும் செயற்பட்டனர். அவ்வாறானவர்கள் அரசாங்கத்தை




விமர்சிக்கின்றனர்.

எனினும், அந்த அரசாங்கத்தில் தாங்கள் பிரபல்யமான அமைச்சுகளை பொறுப்பேற்று செயற்பட்டவர்கள் என்பதை அவர்கள் மறந்துவிட்டனர் என்று கூறிய இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க, அரசாங்கம் என்றவகையில் பொறுப்புடன் நாங்கள் செயற்படுகின்றோம். உணவு பாதுகாப்பு தொடர்பில் ஆகக்கூடுதலான கவனத்தை செலுத்தி, பிள்ளைகள் உள்ளிட்ட ஏனையோருக்கு உணவுப்பொருட்கள் உள்ளிட்ட பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்றார்.

# குளவி கொட்டியதில் நால்வர் பாதிப்பு

■ துவாரகஷான்

அக்கரப்பத்தனை, பெல்மோரல் தோட்ட பிரிவைச் சேர்ந்த பெரிய நாகவத்தை தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில், பெண் தொழிலாளர்கள் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



தேயிலை செடிக்கு அடியில் கூடு கட்டியிருந்த குளவிகளே நேற்று (18) பகல் 12.30 மணியளவில், கலைந்து கொட்டியுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# இரத்ததான முகாம்

■ டி.சந்ரு

நுவரெலியா பிரதான தபால் காரியாலயத்தில், 148ஆவது சர்வதேச தபால் தினத்தையொட்டி, இரத்ததான முகாம் நான்காவது முறையாக நேற்று (18) செவ்வாய்கிழமை நடத்தப்பட்டது.

நுவரெலியா பிரதேச தபால் அதிகாரி ஜி.குணரத்ன, நுவரெலியா பிரதான தபால் அதிபரி சந்திக அமரகோன் ஆகியோரின் வழிநடத்தலின் கீழ், இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பெரியாஸ்பத்திரிகளின் இரத்த வங்கிகளில் ஏற்பட்ட இரத்த பற்றாக்குறையை கவனத்தில் கொண்டு இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தீபாவளி கொள்ளையை தடுத்து நிறுத்தவும்

■ எச்.எம்.ஹேவா

தீபாவளி பண்டிகையின் போது, சில பொருட்களின் விலையை பல்வேறு வழிகளில் உயர்த்தி, மக்களை ஏமாற்றும் நடவடிக்கையை, சில மோசடி வியாபாரிகள் மேற்கொள்கின்றனர் எனத் தெரிவித்த அகில இலங்கை முற்போக்கு தொழிலாளர் முன்னணி எஸ்.பி இளங்கோ காந்தி, பெருந்தோட்டங்களை அண்மித்த நகரங்களில் விலை கட்டுப்பாட்டு சோதனைகளை முன்னெடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக நுவரெலியா மாட்டத்தில் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் தயாராகி வருகின்றனர். எனினும், பெருந்தோட்டங்களை அண்மித்த நகரங்களிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் தீபாவளி கொள்ளை இடம்பெறுகிறது.

பயறு, உளுந்து, சீனி, கருப்பட்டி, தேங்காய் எண்ணெய், கோதுமை மா ஆகியவற்றுக்கு செயற்கையாக தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதற்கு சில வர்த்தகர்கள் முயல்கின்றனர்.

இவ்வாறான பொருட்களின் விலைகளை தாங்கள் நினைத்தவாறு அதிகரித்தால், அப்பாவி மக்களால் முறையாக தீபாவளியை கொண்டாட முடியாத நிலைமை ஏற்படும். ஆகையால், விலை கட்டுப்பாட்டு சோதனைகளை முன்னெடுத்து, அதிகூடிய விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டரீதியிலான நடவடிக்கையை எடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.



# அடைமழையால் நிரம்புகின்றன

■ சுதத் எச்.எம்.ஹேவா, ரஞ்சித் ராஜபக்ஷ

மத்திய மலைநாட்டில், நீரேந்தும் பிரதேசங்களில் கடந்த சில நாள்களாக பெய்யும் அடைமழையால் நீர்த்தேக்கங்கள் நிரம்பி வருகின்றன. சில நீர்த்தேக்கங்களில் மட்டத்தை விடவும் நீர் அதிகரித்துள்ளது என நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமலசூரிய, லக்ஷபான, நவ லக்ஷபான, காசல்ரீ உள்ளிட்ட மின்னுற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களாக நீடித்த அடைமழை, இன்னும் சில நாள்களுக்கு தொடர்ந்தும் இருக்குமாயின் வான்கதவுகளை திறக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அந்த அதிகாரிகள் எதிர்வுகூறியுள்ளனர்.



ஆகையால், நீர்த்தேக்கங்களுக்கு கீழான ஆற்றங்கரையோரங்களில் வாழ்வோரும், மலையகத்துக்கு சுற்றுலா சென்று, ஆற்றுகளில், நீரோடைகளில் நீராடுவதற்கு முயல்வோரும் அவதானமாக இருக்கவேண்டுமென அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# கணேசமூர்த்திக்கு ரூ.15 இலட்சம் இழப்பீடு

பசறை, கனவரல்லைப் பெருந்தோட்ட ஈ. ஜி. கே பிரிவில் மின்சாரம் தாக்கி பலியான 25 வயதான தமிழரசன் கணேசமூர்த்திக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான பேச்சுவார்த்தை, பதுளை உதவி தொழில் ஆணையாளர் தலைமையில் அவரது அலுவலகத்தில் திங்கட்கிழமை (17) மாலை நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க மாநில இயக்குநர் எஸ். முத்துகுமார், இணைப்பாளர் ஜி. ஜெயச்சந்திரன் மற்றும் தோட்டமட்டத் தலைவர்கள், மரணமடைந்த தமிழரசன் கணேசமூர்த்தி சார்பாகவும், தோட்ட கம்பனியான நமுனுகலை பிளான்டேசன் சார்பாக தோட்ட முகாமையாளரும் கலந்து கொண்டிருந்தனர்.



தோட்ட அதிகாரியின் வீட்டில் மின்சாரம் தாக்கி மரணமான தமிழரசன் கணேசமூர்த்திக்கு இழப்பீடாக 15 இலட்ச ரூபாய் பணத்தை வழங்க தீர்மானித்திருப்பதாக தோட்ட முகாமையாளர் கூறினார். ஆனாலும், இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு, மரணமானவரின் குடும்பத்தினர் எவரும் சமூகமளித்திருக்கவில்லை.

அத்துடன், மரணமானவரின் குடும்பத்தினர் ஒருவருக்கு தோட்டக் கள உத்தியோகத்தர் பதவியை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

தோட்ட முகாமையாளரின் பொறுப்பில் இழப்பீட்டுத் தொகை இருப்பதால், மரணமானவரின் குடும்பத்தினர் அத்தொகையைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அறிவிக்கப்பட்டது.

தொழிற்சங்க மாநில இயக்குநர் எஸ். முத்துக்குமார் கருத்துத் தெரிவிக்கையில், “எம்மால் முடிந்ததை இழப்பீடாகப் பெற்றுக் கொடுக்கவுள்ளோம். இதனை விட கூடுதலாக இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுக்க எவரும் முன் வருவார்களேயானால், அதனை நாம் வரவேற்போம்” என்றார்.

# வெள்ளை ஈ குறித்து கவனம்

■ என். ஆராச்சி

தென்னை பயிர்செய்கையின் போது, வெள்ளை ஈயால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில், தெங்கு பயிர்செய்கையாளர்களுக்கு தெளிவுப்படுத்தும் வேலைத்திட்டம், ரம்புக்கனை பிரதேசத்தில் திங்கட்கிழமை (17) முன்னெடுக்கப்பட்டது.



# பல்கலைக்கழகங்களில் வதைக்கும் ‘சைபர்’ பகடிவதைகள்

பெரும்பாலான பாலியல் துன்புறுத்தல்கள், நெருங்கிய உறவினர்களால், அக்கம்பக்கத்தை சேர்ந்தவர்களால் இடம்பெறுவது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது. ஆகையால், கைக்கெட்டிய தூரத்தில் இருப்பவர்கள், உறவினர்களென உரிமை, சம்பந்தம் பேசுவோரிடம் மிகக் கவனமாகவும் அவதானமாகவும் இருக்கவேண்டும்.

ஒருவரின் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாத பலரும் அருகில் இருந்துகொண்டே குழியைப்பறித்து தடுத்துவிடுவோர். தடைகள் பலவற்றை தாண்டி, பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் மாணவர்களில் பலரது கனவு, நூலறுந்த பட்டமாகிவிடுகின்றது. சிரேஷ்ட மாணவர்கள் எனத் தங்களைக் கூறிக்கொள்ளும் ‘சிரேஷ்டத்துவம்’ இல்லாத மாணவர்களில் சிலரே, பகடிவதை என்னும் போர்வைக்குள் நின்று, புதிய மாணவர்களின் கனவைக் கலைத்துவிடுகின்றனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இடம்பெறும் பகடிவதை காரணமாக, 2000ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 169 மாணவர்கள் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளனர்.

இதனை ஒரு செய்தியாக மட்டுமே பார்த்துவிடக்கூடாது. எதிர்கால கல்விமான்களை இழந்து நிற்கின்றோம். ஏனைய பல்கலைக்கழங்களின் பீடங்களில் இருந்து விலகியோரை கணக்கில் எடுத்தால், இந்த எண்ணிக்கை பல மடங்குகளால் அதிகரிக்கக்கூடும்.

இதேவேளை, பாலியல் சுரண்டல்கள், சீண்டல், சேஷ்டை போன்றவை காரணமாக ஒன்பது ஆயிரத்துக்கும் அதிகமான மாணவிகள், தங்களுடைய பல்கலைக்கழக கல்வியை இடைநிறுத்திக்கொண்டுள்ளனர்.

பகிடிவதையால் பல்கலைக்கழக மாணவர்களும் மாணவிகளும் மரணித்த சம்பவங்கள் ஏராளம். ஆகையால், பகடிவதைக்கு தூபமிடுவோர் முதல், பகடிவதையில் ஈடுபடுவோர் வரையிலும் அனைவரையும் கைது செய்து, சட்டத்தின் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன் ஓரிரண்டு ஆண்டுகளுக்கேனும் பல்கலைக்கழகத்துக்குள் நுழையவிடாத வகையிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளவேண்டும்.

இந்நிலையில், பல்கலைக்கழகங்களில் ‘சைபர் பகடிவதை’ முன்னெடுக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது அரசியல் பின்புலத்துடன் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. உடல், உள ரீதியிலான துன்புறுத்தலுக்கு மேலாக, ‘சைபர் பகடிவதை’ சென்றுவிட்டது.

ஆகையால், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிலையங்கள் உள்ளிட்டவற்றில், எந்த வகையிலான பகடிவதைகளையும் முற்றாக இல்லாமல் செய்யும் வகையில் சட்டம் இயற்றவேண்டும். அச்சட்டத்தை அச்சொட்டாக நடைமுறைப்படுத்த வேண்டும். குற்றமிழைப்போருக்கு வழங்கப்படும் தண்டனை, ஏனையோருக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

புதிய வரவுகளை வரவேற்பவர்களாக பழைய மாணவர்கள் இருப்பார்களாயின் இருதரப்பினருக்கும் இடையில் அன்னியோன்னியம் ஏற்படும். பகடிவதைகளின் ஊடாகதான், அறிமுகம் செய்துகொள்ள வேண்டுமாயின், அவ்வாறானதோர் அறிமுகமே தேவையில்லை.

ஒவ்வொரு துறைகளுக்கும் பின்தங்கிய பிரதேசங்களில் இருந்து செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. உயர்தரத்தில் திறமையான சித்திகளைப் பெற்று, பட்டங்களைப் பெறவேண்டும் எனும் உத்வேகத்துடன் பல்கலைக்கழகங்களுக்குள் கால்களை வைக்கும் மாணவர்களின் கனவை கலைத்துவிடாதீர்கள்.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தெரியாத விடயத்தை தெரிந்தது போல் பேசுவதால் அவமானப்பட நேரிடலாம். இத்தகைய நபர்கள் கேலிக்குரியவர்கள் ஆவார். எந்தச் சிறு விடயங்களையும், தெரியாது என உண்மையுடன் கூறினால் தவறில்லை.

மெத்தப் படித்தவர்களுக்கும் பல விடயங்கள் தெரியாமல் இருக்கலாம். முழுமையான ஞானம் உள்ளவர்களாக எவரையும் கடவுள் படைக்கவில்லை.

ஏதோ ஒரு விடயத்தில் மனிதன் இடறிவிடுகின்றான். தெரியாத விடயத்தைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை.

வாழ்க்கை பூராவும் நாங்கள் எதையெதையோ கற்றபடிதான் இருக்கின்றோம்.

பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று முன்னேறினாலும் கல்வியில் முடிவு தெரியாது. முழுமையாக எதையும் ஆராய்ந்து முடிவெடுக்க முடியாது. கல்வியில் நாட்டம் கூடக்கூட, அதன் மீதான ஈர்ப்பும் தொடர்ந்தவண்ணமாகவே இருக்கும்.

கல்வி ஒருவரை வெளிச்சத்தக்கு இட்டுச் செல்கின்றது. கல்வியில் ஈர்ப்புக் கொண்டவர்கள் பாக்கியவான்கள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# உள்ளுராட்சி சபைகளும் காணாமற்போகுமா?



எம்.எஸ்.எம் ஐயூப்

பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளுராட்சி மன்றம் ஆகியவற்றின் தேர்தல் முறைகளில், முக்கிய மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஞாயிற்றுக்கிழமை (09) கூறியிருந்தார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற தொழிற்றுறைசார் நிபுணர்களுக்கான கூட்டமொன்றின் போதே, அவர் இதைக் கூறியிருந்தார்.

ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்த முடியாத நிலை, தற்போது ஏற்பட்டு இருப்பதைப் போல், பாராளுமன்றம், உள்ளுராட்சி மன்றம் ஆகியவற்றின் தேர்தல்களையும் நடத்த முடியாத நிலையை ஏற்படுத்தவே, ஜனாதிபதி முயல்வதாகவே எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நாட்டில் உள்ள 341 உள்ளுராட்சி மன்றங்களில், தற்போது 8,700க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அந்த எண்ணிக்கையை 4,000 வரை குறைப்பது, ஜனாதிபதியின் ஆலோசனைகளில் ஒன்றாகும்.

அத்தோடு, பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டுவர, பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்க இருப்பதாகவும் 2023ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்கு முன்னர், அந்தக்குழு பொருத்தமான ஆலோசனைகளை முன்வைக்கத் தவறினால், அந்த விடயத்துக்காக சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

விருப்புவாக்கு முறை, தேர்தல்களின் போது ஊழல்கள் இடம்பெறுவதற்கு பிரதான காரணமாக இருப்பதால், அம்முறையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுப்பது, அவரது மற்றோர் ஆலோசனையாகும்.

அதேவேளை, அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தேர்தல்களின் போது செலவிடும் பணத்தொகையும், ஊழல்களுக்கு இட்டுச் செல்வதாகவும் அதேபோல், அதன் மூலம் சில வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் பலர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்தச் செலவுக்கு வரம்புகளை நிர்ணயிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

மேலோட்டமாகப் பார்க்கும் போது, இந்த ஆலோசனைகள் மிகச் சிறந்வையாகவே தெரிகிறது. ஆனால், நாடு பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், திடீரென ஜனாதிபதி இவ்வாறான ஆலோசனைகளை முன்வைப்பதை, எதிர்க்கட்சிகள் சந்தேகக் கண் கொண்டே பார்க்கின்றன.

இவற்றில், உள்ளுராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது மட்டுமே, தற்போதைய நிலையில் அவசரமான ஆலோசனையாகத் தெரிகிறது. ஆனால், அதிலும் வேறு உள்நோக்கம் இருப்பதாக எதிர்க்கட்சிகள் சந்தேகிக்கின்றன.

இது ஒருபுறமிருக்க, இந்த ஆலோனைகளை சட்டங்களாக நிறைவேற்றுவதிலும் தற்போதைய நிலையில் நடைமுறை பிரச்சினைகள் பல இருக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த ஜூலை மாதத்தில், பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தெரிவின் போது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வாக்குப் பலத்தாலேயே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இந்த நிலையில், இந்த ஆலோசனைகளை பொதுஜன பெரமுன ஆதரித்தால் மட்டுமே, நிறைவேற்ற முடியும்.

எந்தவொரு கட்சிக்கும் பிரதேச மட்ட அரசியல்வாதிகளின் உதவியின்றி, பிரதேச மட்டத்தில் அரசியல் பணிகளை மேற்கொள்ள முடியாது. தற்போதைய நிலையில், 8,700 உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4,000 ஆகக் குறைக்க முற்படும் போது, அதற்கு பிரதேச மட்ட அரசியல்வாதிகள் எதிர்ப்பு தெரிவிக்கும் சாத்தியம் அதிகம். எனவே, இது எவ்வளவு நல்ல ஆலோசனையாக இருந்தாலும், இதை ஆதரிக்கும் போது, எந்தவொரு கட்சியும் இரண்டு முறை சிந்திக்கும்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாத தற்போதைய நிலையை, 2017ஆம் ஆண்டு, வேண்டுமென்றே ரணில் விக்கிரமசிங்க உருவாக்கினார் என்றே எதிர்க்கட்சிகள் கருதுகின்றன. அன்று நடந்ததை, மீண்டும் மீளாய்வு செய்து பார்த்தால் அந்தக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கவும் முடியாது.

2017ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், அப்போதைய நல்லாட்சி அரசாங்கம், மாகாண சபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் வகையில், புதிய சட்ட வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அது, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் என்று அப்போது அழைக்கப்பட்டது. அதை எவரும் எதிர்க்கவில்லை.

ஆனால், அச்சட்டமூலம் நிறைவேறினால் சில மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்க நேரிடும் என்றும், அது சட்ட விரோதம் என்றும் சட்டத்தில் உள்ள வேறு சில பிரமாணங்கள் மூலமும் மாகாண சபைகளின் உரிமைகள் பாதிக்கப்படும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அதையடுத்து, அரசாங்கம் அந்த அரசியலமைப்புத் திருத்தத்தை கைவிட்டுவிட்டு, மாகாண சபைத் தேர்தல் சட்டத்துக்கு திருத்தம் ஒன்றை முன்வைத்தது. மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள், தத்தமது வேட்பாளர் பட்டியல்களில் 30 சதவீதம் பெண்களை உள்ளடக்க வேண்டும் என்பதே திருத்தத்தின் நோக்கமாகும். அதையும் எவரும் எதிர்க்கவில்லை.

சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது, அதற்கான விவாதத்தின் குழுநிலையின் போது, ஆளும் கட்சியும் ஏனைய கட்சிகளும் அதற்கு திருத்தங்களை சேர்க்க நடவடிக்கை எடுப்பது வழக்கமாகும். அதேபோல், இந்தச் சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின் குழுநிலையின் போதும், அரசாங்கம் ஒரு திருத்தத்தை முன்வைத்தது. வழமையாக குழுநிலை விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்படும் திருத்தங்கள், விவாதிக்கப்படும் விடயத்துக்கு உரியதாகவே இருக்கும். ஆனால், இந்தத் திருத்தம், விவாதிக்கப்பட்ட விடயத்தோடு சம்பந்தமே இல்லாத ஒன்றாக இருந்தது.

விவாதிக்கப்பட்ட விடயம், பெண் வேட்பாளர்கள் தொடர்பானதாகும். ஆனால், சமர்ப்பிக்கப்பட்ட திருத்தம், கலப்புத் தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பானதாகும். கலப்புத் தேர்தல் முறையையும் அப்போது எவரும் எதிர்க்காத போதிலும், இந்தத் திருத்தம் சம்பந்தமே இல்லாத ஒரு விடயத்தோடு, முடிச்சுப் போட்டு சமர்ப்பித்தலானது சந்தேகத்துக்கு உரியதாக இருந்தது.

முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின் மூலம், மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்க முடியாமல் போனதால், இந்தத் திருத்தத்தின் மூலம், தேர்தல்களை ஒத்திவைக்க அரசாங்கம் முயல்வதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

அவர்களது குற்றச்சாட்டை நிரூபிப்பதைப் போல், அடுத்தடுத்த நடவடிக்கைகள் அமைந்தன. இத்திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், அடுத்த கட்டமாக கே. தவலிங்கத்தின் தலைமையில், எல்லை நிர்ணய குழு நியமிக்கப்பட்டது. அக்குழு விரைவில், தமது அறிக்கையை சமர்ப்பித்த போதிலும், நாடாளுமன்றம் அதை ஏற்கவில்லை.

அதையடுத்து, அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டது. அக்குழு, தனது அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கவில்லை. விடயம், அத்தோடு கிடப்பில் போடப்பட்டது. இன்றுவரை அந்தத் தேர்தல்கள் நடைபெறவிலலை.

உண்மையிலேயே, இந்தத் திருத்தத்தை தனியான ஒரு சட்ட மூலமாக சமர்ப்பித்து இருந்தால், அதுவும் உயர்நீதிமன்றத்தால் ஆராயப்பட்டு இருக்கும். அப்போது, மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப்போடும் பிரச்சினை மீண்டும் எழுந்திருக்கும். ஏனெனில், மாகாண சபைகளுக்கான பிரதேசங்களில், புதிதாக தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயித்தே கலப்புத் முறையில் தேர்தல்களை நடத்த முடியும். அதற்கு நீண்ட காலம் எடுக்கும். மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப்போடும் நோக்கத்திலேயே, அரசாங்கம் அத்திருத்தத்தை குறுக்கு வழியில் கொண்டு வந்தது என்பது தெளிவாகியது.

அரசாங்கம் இப்போதும், அதே தந்திரத்தைத்தான் கையாள்கிறது என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. கலப்புத் தேர்தல் முறையை மாற்றாமல், உள்ளுராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை 8,700இல் இருந்து 4,000 ஆக குறைப்பதாயின், அதற்காக மீண்டும் உள்ளுராட்சி மன்றங்களின் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். அதற்காக, மீண்டும் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதற்கு குறைந்தபட்சம், மூன்று வருடங்கள் தேவைப்படும் என அநுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்.

உள்ளுராட்சி மன்றத் தேர்தல்களை, கலப்பு முறையில் நடத்துவதற்கான சட்டம், 2012ஆம் ஆண்டே நிறைவேற்றப்பட்டது. ஆனால், அம்முறைக்குரிய எல்லை நிர்ணய பணிகள், 2016ஆம் ஆண்டு வரை நீடித்தன. எனவேதான் அரசாங்கம், தேர்தல்களை ஒத்திவைக்கும் நோக்கிலேயே, இந்தத் திட்டத்தை தீட்டுகிறது என குற்றஞ்சாட்டப்படுகிறது.

பொதுத் தேர்தல் சட்டம் தொடர்பாகவும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதாக ஜனாதிபதி கூறுகிறார். ஆளும்கட்சி, மக்கள் ஆணையை இழந்துவிட்டதால், பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரும்போது, தற்போதைய பொருளாதார நிலைமையின் கீழ், தேர்தல் நடத்த முடியாது என்று ஆளும் கட்சியினர் கூறுகின்றனர். அவ்வாறாயின், சர்வஜன வாக்கடுப்பை எவ்வாறு நடத்தலாம்?

அதேவேளை, அவ்வாறு வாக்கெடுப்பை நடத்தினாலும் ஒரு தேர்தல் முறையை மக்கள் முன்வைத்து அதனை ஆதரிக்கிறீர்களா இல்லையா என்று தான் கேட்க வேண்டும். அந்தத் தேர்தல் முறையை தயாரிப்பது யார்? வாக்கெடுப்பு நடந்தாலும் மக்கள் அறிவுபூர்வமாக வாக்களிப்பார்களா?

எனவே, ஜனாதிபதியின் இந்தப் புதிய ஆலோசனைகள், தற்போதைய பொருளாதார நிலையில், மக்களுக்கு முன்னால் செல்வதற்கு அரசாங்கத்துக்கு இருக்கும் அச்சத்தின் வெளிப்பாடாகத் தான் தெரிகிறது.

## கழிதங்கள்

### மாங்குளம் – வெள்ளாங்குளம் பிரதான வீதி:

# கால்நடைகளின் நடமாட்டத்தால் பயணிகள் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் - வெள்ளாங்குளம் பிரதான வீதியில், இரவு - பகல் என எந்தவேளைகளிலும் கால்நடைகளின் நடமாட்டத்தால், வீதியில் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் அடிக்கடி விபத்துகளும் இடம்பெற்று வருகின்றன.

ஏ-9 வீதியில் மாங்குளத்தில் இருந்து துணுக்காய் ஊடாக வெள்ளாங்குளம் வரை செல்லும் பிரதான வீதியில், மாங்குளம், வன்னிவிளாங்குளம், மல்லாவி, துணுக்காய், கல்விளான், சேவாலங்கா கிராமம், வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில், கட்டாக்காலிகளாக விடப்பட்டுள்ள கால்நடைகள், இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் வீதியிலேயே காணப்படுகின்றன.

இவ்வாறு வீதியில் கட்டாக்காலி கால்நடைகள் காணப்படுவதால் வீதியால் பயணிக்கும் வாகனங்கள், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் அடிக்கடி விபத்துகளும் இடம்பெறுகின்றன. இந்த விபத்துகளால் பெருமளவானோர் காயமடைவதுடன் உயிரிழப்புகள் கூட இடம்பெற்றுள்ளன.

எனவே, இவ்வாறு கட்டாக்காலிகளாக வீதியில் அலையும் கால்நடைகளை கட்டுப்படுத்த, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்





# அமைச்சரவை முடிவுகள் சில...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் சில...

**01. அரச சொத்துகள் முகாமைத்துவ சட்டமூலம்**

2022ஆம் ஆண்டு நிதி ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத் திருத்தம் செய்வதற்காக ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்ட உரையின் பிரகாரம், திறைசேரியின் கீழ் காணப்படும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அலுவலகத்தின் பணிகளை விரிவாக்கம் செய்து அதற்குரிய சட்ட அங்கிகாரம் வழங்குவதற்கும், தேசிய சொத்துகள் ஆவணத்தைத் தயாரிப்பதற்கும் மற்றும் அரச சொத்துகள் தொடர்பாக மையப்படுத்திய தரவுத்தொகுதியை அறிமுகப்படுத்துவதற்கும் இயலுமாகும் வகையில் பொருத்தமான ஏற்பாடுகளை உள்வாங்கி, அரச சொத்துகள் முகாமைத்துவத்திற்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**02. ஆயுர்வேத சட்டத்தை திருத்தம் செய்தல்**

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு இயலுமாகும் வகையிலும் மற்றும் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையிலும் ஆயுர்வேத சட்டத்தை மேலும் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, சுதேச மருத்துவத்துறையின் மேம்பாட்டுக்காக ஆயுர்வேத திணைக்களத்தின் சேவைகளை விரிவாக்கம் செய்வதற்காக மற்றும் ஆராய்ச்சி மூலிகைப் பூங்காக்களை உருவாக்கல் போன்ற பணிகளுக்குப் பொருத்தமான ஏற்பாடுகளை உள்வாங்கி ஆயுர்வேத சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சுகாதார அமைச்சர், சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**03. புதிய சட்டத்தை தயாரிக்க அங்கிகாரம்**

குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் வளாகங்களின் உடமையை மீளப் பெற்றுக்கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை விதிப்பதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2021 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**04. ‘தேசிய ஜன சபை தேசிய செயலகத்தை’ தாபித்தல்**

இலங்கையில் இதுவரை நடைமுறையிலுள்ள பிரதிநிதித்துவ ஜனநாயகக் கட்டமைப்பின் மூலம் மக்களின் உண்மையான பிரச்சினைகள் போதியளவு விழித்துக் கூறப்படாமையால், இம்முறைமையில் ஆட்சி மையம் மற்றும் மக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற தொடர்புகள் விலகிச் சென்று கொண்டிருப்பதால், கொள்கைத் தீர்மானங்களை எடுக்கின்ற செயன்முறையில் பொதுமக்களின் கருத்துகளுக்கு போதுமானளவு செவிமடுக்காமையாலும், அது தொடர்பாக சமூகத்தில் விமர்சனங்களும் உருவாகி வருகின்றமையாலும், குறித்த விமர்சனங்களின் அடிப்படையில் சமூகத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு எதிரான கருத்துகள், எதிர்ப்புகள் உருவாகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலைமையில் கிராமிய மட்டத்தில் பங்கேற்பு ஜனநாயகப் பண்புகளுடன் இயங்குகின்ற நிறுவனக் கட்டமைப்பொன்றில், அரச அலுவலர்களும் மற்றும் பொது மக்களும் இணைந்து கிராமத்திலுள்ள பிரச்சினைகளைக் கலந்துரையாடக் கூடிய, அபிவிருத்தி முன்னுரிமைகளைத் தீர்மானிக்கக் கூடிய மற்றும் கிராமிய மக்களுக்கு தீர்மானமெடுக்கின்ற செயன்முறையில் பங்கேற்கக் கூடிய பலம்வாய்ந்த பொறிமுறையொன்று தேவையாகும்.

அரச கொள்கை வகுப்புக்காக மக்களுக்கு தமது கருத்துகளை முனைப்பாக வழங்கக் கூடியதாக இருக்கின்ற மற்றும் சமூகப் பங்கேற்புடன் குறித்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையிலான ஏற்பாடுகள் அடங்கிய பொறிமுறையின் மூலம் அதிகாரிகள்வாதம் மற்றும் தன்னிச்சையான அரசியல்மயப்படுத்தல் மூலம் நிகழக்கூடிய பொதுமக்கள் அழுத்தங்களை பயனுள்ள வகையிலும் வினைத்திறனாகவும் தடுப்பதற்கு இயலுமாகும். அதற்கமைய, அரச கொள்கை வகுப்பு மற்றும் குறித்த கொள்கையை வெற்றிகரமாக அமலாக்குவதற்காக பொதுமக்களின் பங்கேற்புடன் பெற்றுக்கொள்ளக் கூடிய சுயாதீன நிறுவனக் கட்டமைப்புடன் கூடிய நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைமையில் ‘ஜன சபை முறைமை’ தொடர்பான கொள்கைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கொள்கைப்பத்திரத்தின் மூலம் நாட்டிலுள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக ‘கிராமிய ஜன சபை’ நிறுவுவதற்கும், தேசிய மட்டத்தில் ‘தேசிய ஜன சபை’ நிறுவுவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த கொள்கைப்பத்திரத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள ‘ஜன சபை முறைமை’ அரசானது அடிப்படை கொள்கையாக ஏற்றுக்கொள்வதற்கும், ‘ஜன சபை முறைமை’ நிறுவுவதற்காக தேசிய மட்டத்தில் சுயாதீன கேந்திர நிறுவனமாக ‘தேசிய ஜன சபை செயலகம்’ தாபிப்பதற்கும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

XXX

# மர்மங்கள் நிறைந்த ஜெயலலிதா மரணம்



## சசிகலா உட்பட நால்வர் குற்றவாளிகள்

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவில், சசிகலா உட்பட 4 பேர் குற்றவாளிகள், என விசாரணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகப் பலரும் தெரிவித்த நிலையில், 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் 25 ஆம் திகதி ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

இந்நிலையில், 5 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டப்பேரவையில் நேற்றைய தினம் (18) தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த அறிக்கையில் ‘சசிகலா, வைத்தியர் கே.எஸ்.சிவகுமார், சுகாதரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், சுகாதாரத்துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் ஆகியோர் குற்றம் செய்தவர்களாக முடிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது விசாரணை நடத்த பரிந்துரை செய்யப்படுகின்றது’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஜெயலலிதா மயக்கமடைந்த நிலையில் தான் போயஸ் கார்டனில் இருந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனவும் அவர் மயக்கமடைந்த பின்னர் நடந்த நிகழ்வுகள் அனைத்தும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன எனவும் குறித்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஜெயலலிதா இறந்த நாள் மற்றும் இறந்த நேரத்திலும் முரண்பாடு உள்ளது. சாட்சியங்கள் அடிப்படையில் ஜெயலலிதா இறந்த நேரம் 2016 டிசெம்பர் 4ஆம் திகதி நண்பகல் 3 முதல் 3.30 மணி ஆகும். ஆனால் 5ஆம் திகதி இரவு 11.30 மணிக்கு ஜெயலலிதா இறந்தார் என அப்போலோ மருத்துவமனை அறிவித்திருந்தது. இதனால் ஜெயலலிதாவின் மரணம் அறிவிப்பதில் திட்டமிட்டு தாமதம் செய்யப்பட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உத்திர பிரதேசம்

# “நாம் சாகப்போகிறோம்”

## இறப்பதற்கு முன் ‘லைவ்’

உத்திரபிரதேசம், லக்னோ - காசிபூர் மாவட்டங்களை இணைக்கும் பூர்வாஞ்சல் வீதியில், கடந்த 15 ஆம் திகதி BMW காரொன்று கனரக வாகனமொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இக் கோரவிபத்தில் காரில் பயணித்த நான்கு பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்நிலையில் இவ்விபத்து ஏற்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் அவர்கள் ஃபேஸ்புக்கில் பதிவிட்ட ‘லைவ்’ வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.


மருத்துவக் கல்லூரி பேராசிரியரான ஆனந்த் பிரகாஷ் என்பவரே அக் காரைச் செலுத்தியுள்ளார். அவருடன் அவரது நண்பர்கள் மூவர் சுல்தான்பூரிலிருந்து புதுடெல்லியை நோக்கிப் பயணித்துள்ளனர்.

இதன்போது ஒருவர், ஃபேஸ்புக்கில் நேரலையில் வந்துள்ளார். அதில் 100 கிலோ மீற்றர் வேகத்தில் சென்றுக்கொண்டிருக்கும் காரின் வேகத்தை பிரகாஷ் அதிகரிப்பதும், ஒரு கட்டத்தில் 220 கிலோ மீற்றர் வேகத்தை தொட்டதும், அவரிடம், 300 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லுமாறு ஒருவர் கூறுவதும் பதிவாகியுள்ளது.

அத்துடன் மற்றுமொரு நபர் “வேகத்தை குறைக்குமாறும், நாம் சாகப்போகின்றோம்” என்று கூறுவதும் அவரை பொருட்படுத்தாமல் பிரகாஷ் காரை வேகமாகச் செலுத்துவதும் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், குறித்த ஃபேஸ்புக் நேரலை நிறுத்தப்பட்ட சிறிது நேரத்திலேயே, அக்காரானது எதிரே வந்த கனரக வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து கனரக வாகனத்தின் சாரதி தப்பிச்சென்றுள்ள நிலையில், இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



மதுரை

## இனக்கலவரத்தில் இந்துத் தமிழர்களே பெரிதும்

# பாதிக்கப்பட்டனர்

“இலங்கை இனக்கலவரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இந்துத் தமிழர்களே” என உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தெரிவித்துள்ளது.

இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த பெண்ணொருவர், இந்திய குடியுரிமையைக் கோரி தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் விசாரித்த போதே இதனைத் தெரிவித்துள்ளது.

திருச்சியைச் சேர்ந்த அபிராமி என்பவர், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் குறித்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவில், “எனது பெற்றோர் இலங்கை குடிமக்கள். இனக்கலவரம் காரணமாக இந்தியாவுக்கு வருகை தந்தனர். நான், 1993ஆம் ஆண்டு திருச்சியிலுள்ள மருத்துவமனையில் பிறந்தேன். இந்தியாவில் 29 ஆண்டுகளாக வசித்து வருகின்றேன். எனது பாடசாலைப் படிப்பை இங்கு தான் முடித்தேன். எனக்கு ஆதார் அட்டை வழங்கப்பட்டது.

இதனையடுத்து இந்திய குடியுரிமை வழங்கக்கோரி திருச்சி கலெக்டருக்கு மனு அனுப்பினேன். அதை தமிழக அரசின் பொதுத்துறை, வெளிநாட்டினர் விவகார பிரிவு செயலருக்கு அனுப்ப உத்தரவிட வேண்டும்” என்று கோரியிருந்தார்.

அந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதன் கூறியதாவது: “மனுதாரர் புலம்பெயர்ந்த பெற்றோரின் வழித்தோன்றல் என்றாலும், அவர் இந்தியாவில் பிறந்தவர். அவர் ஒருபோதும் இலங்கை குடிமகளாக இருந்ததில்லை. மனுதாரரின் கோரிக்கை



ஏற்கப்படாவிடில், அவர் நாடற்றவர் என்ற நிலைக்குத் தள்ளப்படுவார்.

இந்தியாவில் மத்திய அரசு சமீபத்தில் குடியுரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்தது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் போன்ற அண்டை நாடுகளில் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டு இந்தியாவில் குடியேறிய சிறுபான்மையினர் தற்போது இந்திய குடியுரிமை பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

குடியுரிமை சட்டத் திருத்தத்திற்குள் இலங்கை வரவில்லை என்றாலும், அதே கொள்கை அவர்களுக்கும் சமமாகப் பொருந்தும். இலங்கை இனக்கலவரத்தில் பெரிதும் இந்துத் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர் என்பதை நீதித்துறை கவனத்தில் கொள்கிறது. மனுதாரரின் கோரிக்கையை பரிசீலிப்பதில் எந்த தடையும் இருக்க முடியாது. எனவே மனுதாரரின் விண்ணப்பத்தை திருச்சி கலெக்டர் மாநில பொதுத்துறை செயலருக்கு அனுப்ப வேண்டும். அவர் மத்திய உள்துறை செயலாளருக்கு அனுப்ப வேண்டும். அவர் 16 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும்” இவ்வாறு அவர் உத்தரவிட்டார்.

காசியாபத்

# நாய்களுக்குத் தடை

பிட்புல், ரொட்வெய்லர், டாகோ அர்ஜென்டீனோ ஆகிய மூன்று வகை நாய்களைச் செல்லப் பிராணிகளாக வீட்டில் வளர்க்க காசியாபத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.


மிகவும் ஆக்ரோஷமான நாய் வகைகளில் பிட்புல், ரொட்வெய்லர் ஆகியவை அடங்கும். சமீப காலங்களாக இவ்வகை நாய்களை இந்தியர்கள் அதிகளவில் வீட்டில் வளர்க்க ஆரம்பித்துள்ளனர்.

எனினும் அவை குழந்தைகள், அவற்றின் உரிமையாளர் என பலரையும் தாக்கி அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன.

குறிப்பாக, அண்மையில் லக்னோவில் ஒரு பெண்ணை பிட்புல் நாய் கடித்துக் கொன்ற சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்து.

மேலும் இந்த வகை நாய்கள், பத்து வயது சிறுவன் முதல் சாலையில் நின்று கொண்டிருந்த பசுமாடு வரை தாக்கிய சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் காசியாபாத் மாநகராட்சி குறித்த மூன்று வகை நாய்களை வீட்டில் வளர்க்க தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

# சுட்டுக்கொல்லப்பட்ட இந்திய குடும்பம்

## ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி

அமெரிக்காவில் சுட்டுக்கொல்லப்பட்ட இந்திய வம்சாவளி, சீக்கிய குடும்பத்தை சேர்ந்த 4 பேரின் இறுதிச்சடங்கில் ஏராளமானோர் பங்கேற்று கண்ணீர் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், கலிபோர்னியா மாநிலத்தில் 8 மாத குழந்தை மற்றும் அவரது பெற்றோர் உள்ளிட்ட 4 பேர் மர்ம நபரால் துப்பாக்கி முனையில்



கடத்தப்பட்டு சுட்டு கொல்லப்பட்டனர்.

அவர்கள் நிறுவனத்தில் பணியாற்றிய முன்னாள் ஊழியரே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.


அமெரிக்கா

# இராணுவ வீரர்களுடன் பிரதமர் தீபாவளி கொண்டாட்டம்

பிரதமர் மோடி பதவியேற்றதிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தீபாவளியன்று, எல்லையில் பாதுகாப்புப் பணியில் உள்ள வீரர்களுடன் பண்டிகையைக் கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அந்த வகையில் இந்த ஆண்டும் இராணுவ வீரர்களுடன் பிரதமர் மோடி தீபாவளி கொண்டாடவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் வீரர்களுடன் பண்டிகையை கொண்டாடும் முன், வரும் 21ஆம் திகதியன்று உத்தரகாண்டின் கேதர்நாத்திற்கு செல்லும் பிரதமர்,



அங்கு நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்வார் எனவும், தொடர்ந்து கேதர்நாத், பத்ரிநாத் கோவில்களைத் தரிசிக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்

# சிலிண்டர்கள் இலவசம்

குஜராத்தில் ஏழைக் குடும்பங்களுக்கு வருடத்திற்கு 2 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

இதன் மூலம் 38 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



டுபாய்

# உலகின் விலை உயர்ந்த வைரம்



உலகின் மிகவும் விலை உயர்ந்த மிகப்பெரிய வைரமான 'கோல்டன் கேனரி' (Golden Canary) டுபாயில் கடந்த 17 ஆம் திகதி 'சோத்பைஸ்' நிறுவனம் நடத்திய கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டது.

303.1 கரட் எடை கொண்ட இவ்வைரமானது, 1980 ஆம் ஆண்டு கொங்கோ ஜனநாயகக் குடியரசில் கண்டுபிடிக்கப்பட்டது எனவும், இதன் மதிப்பு சுமார் 15 மில்லியன் அமெரிக்க டொலர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி இவ்வைரம் நியூயோர்க்கில் ஏலம் விடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாரிஸ்

## ஏலத்துக்கு வந்த டைனோசரின் எலும்புக்கூடு

பல மில்லியன் ஆண்டுகள் பழைமையான டைனோசரின் எலும்புக் கூடொன்று, பாரிஸில் வரும் 20ஆம் திகதி ஏலத்தில் விடப்படவுள்ளது.

2019ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கொலோரேடோவில் கண்டுபிடிக்கப்பட்ட குறித்த எலும்புக் கூடு, தற்போது பிரான்ஸின் பாரிஸ் நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுமார் நான்கு இலட்சம் யூரோ வரை இது ஏலம் போக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா

## உலக சாதனை படைத்த மருத்துவர்



அமெரிக்காவைச் சேர்ந்த 100 வயதான ஹோவர்ட் டக்கர் என்பவர் உலகிலேயே அதிக வயதான மருத்துவர் என்ற உலக சாதனையைப் படைத்துள்ளார்.

அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்தில், க்ளீவ்லேண்ட் என்ற நகரில் வசித்து வரும் இவர், கடந்த 75 வருடங்களாக மருத்துவராகப் பணியாற்றி வருகின்றார்.

அத்துடன் காலையில் 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை தொடர்ச்சியாக நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கும் அவர், கொரோனாத் தொற்றுப் பரவலின் போதும் காணொளி வாயிலாக மருத்துவ சேவையை வழங்கி வந்தார்.

இந்நிலையில், "ஓய்வு என்பது நீண்ட ஆயுளுக்கான எதிரி என்று கூறும் அவர், மருத்துவ துறையில் இருந்து ஓய்வு பெறும் எண்ணமே தனக்கு இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர்

## பூச்சிகளை உட்கொள்ள மக்களுக்கு அரசு அனுமதி?



சீனா, தாய்லாந்து, ஜப்பான் போன்ற ஒரு சில நாடுகளில் பூச்சிகளை, மனிதர்கள் உணவாக உட்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், சிங்கப்பூரில் பூச்சிகளை உணவாக உட்கொள்ளவும், கால்நடை தீவனமாக கொடுப்பதற்கும் அனுமதிப்பது தொடர்பாக உணவு மற்றும் கால்நடை தீவனத் தொழிற்றுறையிடம் சிங்கப்பூர் அரசு அனுமதி கோரியுள்ளது.

இதற்கு அனுமதி கிடைத்தால், வண்டுகள், பூச்சிகள், தேனீக்கள், அந்து பூச்சிகள் போன்றவற்றை மனிதர்கள் உணவாக உட்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து உணவுத்துறை செய்தி தொடர்பாளர் கூறுகையில், "முழுமையான அறிவியல் பூர்வ ஆய்வு மேற்கொண்ட பின்னர், சில குறிப்பிட்ட பூச்சி இனங்களை உணவாக உட்கொள்ள அனுமதிக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அண்மைக்காலமாக மனிதர்கள் உணவாக உட்கொள்ளவும், கால்நடை தீவனத்துக்காகவும் வணிக ரீதியாக பூச்சி பண்ணைகளை உருவாக்குவதற்கும் ஐ.நாவின் உணவு மற்றும் வேளாண்மை பிரிவு அதிகாரிகள் ஊக்குவித்து வருகின்றனர்" எனவும் தெரிவித்துள்ளார்.

நைஜீரியா

## வெள்ளத்தால் 600 க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



நைஜீரியாவில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 603 ஆக அதிகரித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகின்றது.

இதன்காரணமாக நாட்டில் உள்ள 36 மாகாணங்களில், 33 மாகாணங்கள் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இதுவரை இரண்டு இலட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். அவர்களில் 82,000 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 603 ஆக உயர்வடைந்துள்ளது. பலர் காணமற்போயுள்ளனர் எனவும் அவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியா ஆண்டு தோறும் இதுபோன்ற பெருமழை மற்றும் வெள்ளத்தை சந்திக்கும் என்றாலும், கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு மிகவும் மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரித்தானியா

## வரலாறு காணாத வீழ்ச்சியை சந்திக்கும் பிரித்தானியா



பிரித்தானிய அரசு சமீபத்தில் கொண்டு வந்த வரிக்குறைப்பு திட்டங்களை முழுமையாக திரும்ப பெறுவதாக அந்நாட்டின் புதிய நிதி அமைச்சர் ஜெர்மி ஹன்ட் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் புதிய பிரதமராக லிஸ்டர்ஸ் பதவி வகித்து வருகின்றார். இவர் கடந்த மாதம் வரிக் குறைப்புகளை ஆதரிக்கும் விதமாக சில திட்டங்களை வெளியிட்டார்.

குறிப்பாக, செப்டெம்பர் மாதம் கொண்டு வந்த சர்ச்சைக்குரிய மினி வரவு செலவு திட்டத்தில், நிறுவனங்களுக்கான வரி உயர்வு மற்றும் அதிக வருவாய் உள்ளவர்களுக்கு 45 சதவிகித வரி உயர்வு போன்றவற்றை இரத்து செய்வதாகத் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக பிரித்தானியாவின் பொருளாதாரம் நிலை குலைந்து போனது. குறிப்பாக டொலருக்கு நிகரான பவுண்டின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இதற்கிடையே பிரதமரின் இந்தத் திட்டத்திற்கு சொந்த கட்சி எம்பிக்கள் சிலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இந்நிலையில் நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலையில் இருக்கிறது. இதனை பிரதமர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கருத்து தெரிவித்து பிரதமர் லிஸ்டர்ஸ்க்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளார்கள்.

பாகிஸ்தான்

## பாகிஸ்தான் அரசுக்கு இம்ரான்கான் எச்சரிக்கை



பாகிஸ்தானில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தால் இம்ரான்கான் தலைமையிலான ஆட்சி கவிழ்ந்தது.

இதையடுத்து பாகிஸ்தானின் புதிய பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி தலைவர் ஹஷபாஸ் ஷெரீப் பதவியேற்றார்.

எனினும் தனது அரசை வெளிநாட்டு சக்தி சதி செய்து கவிழ்த்து விட்டதாகவும், உடனே பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்றும் இம்ரான்கான் வலியுறுத்தி வந்தார்.

அதேசமயம் இம்ரான் கானின் கட்சியைச் சேர்ந்த 131 சட்டமன்ற உறுப்பினர்கள் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தின் கீழ்சபையிலிருந்து இராஜினாமா செய்தனர்.

இதனையடுத்து குறித்த இடங்களுக்கு கட்டம் கட்டமாக தேர்தல் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் எட்டு தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில், ஆறு இடங்களை இம்ரான் கான் கட்சியினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வெற்றியானது இம்ரான் கானின் கட்சி மீதான மக்களின் ஆதரவு பெருகியிருப்பதை காட்டுவதாக அமைந்துள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானில் விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும், பொதுத்தேர்தலுக்கான திகதியை அரசு உடனடியாக அறிவிக்காவிட்டால், அரசுக்கு எதிராக மிகப் பெரிய பேரணியை நடத்தவுள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# ஐ.அ. அமீரகத்தை வீழ்த்திய இலங்கை

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஜீலொங்கில் நேற்று நடைபெற்ற ஐ.அ. அமீரகத்துடனான முதலாவது சுற்று குழு ஏ போட்டியில் இலங்கை வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஐ.அ. அமீரகத்தின் அணித்தலைவர் சி.பி றிஸ்வான், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, குசல் மென்டிஸ், பதும் நிஸ்ஸங்கவின் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்றபோதும் மென்டிஸை இழந்தது. பின்னர் நிஸ்ஸங்க, தனஞ்சய டி சில்வா ஆகியோர் வேகமாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில், டி சில்வா 33 (21) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து நிஸ்ஸங்க தொடர்ந்தும் ஓட்டங்களைப் பெற்றபோதும், கார்த்திக் மெய்யப்பனின் 15ஆவது ஓவரின் இறுதி மூன்று பந்துகளில் ஹட்-ட்ரிக் முறையில் பானுக ராஜபக்‌ஷ, சரித் அஸலங்க, அணித்தலைவர் தசுன் ஷானக வரிசையாக வீழ்ந்தனர்.

அடுத்து வந்த வனிடு ஹஸரங்க, சாமிக கருணாரத்னவும் ஒற்றை இலக்க ஓட்டங்களோடு வீழ்ந்த நிலையில், இறுதியாக 74 (60) ஓட்டங்களோடு நிஸ்ஸங்கவும் விழ 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களை இலங்கை பெற்றது.

பதிலுக்கு 153 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஐ.அ. அமீரகம் ஆரம்பத்திலிருந்தே துஷ்மந்த சமீர (3), பிரமோத் மதுஷன், ஷானக, ஹஸரங்க (3), மகேஷ் தீக்‌ஷனவிடம் (2) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 17.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 73 ஓட்டங்களையே பெற்று 79 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக நிஸ்ஸங்க தெரிவானார்.

இந்நிலையில், ஜீலொங்கில் முன்னதாக நடைபெற்ற நெதர்லாந்துக்கெதிரான முதலாவது சுற்று குழு ஏ போட்டியில் நமீபியாவை நெதர்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நமீபியா

நமீபியா: 121/6 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: ஜான் பிரைலிங்க் 43 (48) ஓட்டங்கள். பந்துவீச்சு: பஸ் டீ லீட் 2/18 [3], போல் வான் மீக்கரன் 1/18 [4], டிம் பிறிங்கிள் 1/15 [3], கொலின் அக்கர்மன் 1/17 [3], றொலெஃப் வான் டர் மேர்வி 1/6 [1], பிரட் கிளாசென் 0/15 [3])

நெதர்லாந்து: 122/5 (19.3 ஓவ. )

(துடுப்பாட்டம்: விக்ரம்ஜிட் சிங் 39 (31), மக்ஸ் ஓ'டோட் 35 (35), பஸ் டீ லீட் ஆ.இ 30 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜெ.ஜெ. ஸ்மித் 2/24 [4], ஜான் பிரைலிங் 1/16 [4], பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ் 1/21 [4], ஜெர்ஹார்ட் எரெஸ்மஸ் 0/13 [3], ஜான் நிக்கொல் லொஃப்டி-ஈட்டன் 0/8 [1])

போட்டியின் நாயகன்: பஸ் டீ லீட்

இந்நிலையில், ஹோபார்ட்டில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி முதலாவது சுற்றுப் போட்டியில் அயர்லாந்தை ஸ்கொட்லாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளை சிம்பாப்வே எதிர்கொள்ளவுள்ளது.

எங்கள் சிங்கங்களை வாழ்திட நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.







## சாதனையாளர்கள் கௌரவிப்பு

வ.சக்தி

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடை யிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட களுதாவளை மகா வித்தியாலய தேசிய பாடசாலை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி முதல்வர் க.சத்தியமோகன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டி கந்தளாய் லீலாரெத்தின விளையாட்டு மைதானத்தில் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடைபெற்றது. இதில் களுதாவளை மகாவித்தியாலய தேசிய பாடசாலை 123 புள்ளிகளைப் பெற்று மாகாணத்தில் முதலாவது இடத்தை சுவீகரித்துக்கொண்டது.

இங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் 15 தங்கப் பதக்கங்கள், 9 வெள்ளிப்பதக்கங்கள், 8 வெண்கலப்பதக்கங்களை தனதாக்கிக்கொண்டதுடன், 9 விளையாட்டுகளில் புதிய சாதனைகளையும் நிலைநாட்டியுள்ளது.



## அவுஸ்திரேலியாவின் ODI தலைவராகவும் கமின்ஸ்

அவுஸ்திரேலியாவின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான (ODI) அணித்தலைவராகவும் பற் கமின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கென டெஸ்ட் போட்டிகளுக்கான தலைவராகவும் கமின்ஸ் இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் கமின்ஸின் நியமனத்தோடு, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவராக டேவிட் வோர்னர் நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு முடிவுக்கு வந்துள்ளது.

எவ்வாறாயினும் ஒவ்வொரு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் கமின்ஸ் விளையாடுவாரா என்பது சந்தேகத்துக் கிடமானதாகவேயுள்ளது.



## 'சன்பேட்ஸ்' அணி வென்றது

எஸ். கே. குமார்

நுவரெலியா யங்பேட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 47 வருடங்கள் பூர்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட எம் எஸ் லீ சுற்றுக் கிண்ணத்துக்கான அணிக்கு ஏழு பேர்கொண்ட கால்பந்தாட்ட போட்டிகள் சனி, ஞாயிறு கிழமைகளில் (15, 16) நுவரெலியா புதிய நகர மண்டப விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

28 கழகங்கள் பங்குபற்றிய இந்த போட்டியில், 'சன்பேட்ஸ்' அணி முதலாம் இடத்தையும் 'கல்வேஸ்' அணி இரண்டாம் இடத்தையும் பெற்றது.

28 அணிகளும் ஏ, பீ என இரண்டு பிரிவுகளில் நடத்தப்பட்ட இப்போட்டியில் ஏ பிரிவில் முதலாவது அரையிறுப் போட்டியில் 'சன்பேட்ஸ்' அணியும் 'யுனைடெட்' அணியும் போட்டியிட்டு 3–0 என்ற கோல் எண்ணிக்கையில் சன்பேட்ஸ் அணி வெற்றிப்பெற்றது.

பீ பிரிவில் அரையிறுதிப்போட்டியில் 'கல்வேஸ்' அணியும் 'நேஸ்பி' அணியும் போட்டியிட்டு 1–0 என்ற கோல் எண்ணிக்கையில் 'கல்வேஸ்' அணி வெற்றிபெற்றது. இதன் அடிப்படையில் இறுதிப்போட்டியில் சன்பேட்ஸூம் கல்வேஸூம் போட்டியிட்டு 6– 1 என்ற கோல் எண்ணிக்கையில் சன்பேட்ஸ் அணி வெற்றிப்பெற்று, எம் எஸ் லீ கிண்ணத்தையும் 30 ஆயிரம் ரூபாய் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 19 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.